வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆடி திங்கள் 12-ம் நாள் (28—7—1963) ஞாயிற்றுக்கிழமை ரபி. அவ் 6 | இதழ் 9

மில்க்வைற் நீலசோப்

பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# 1964-ல் பொதுத் தேர்தல்?

## சிங்களமொழி அமுலை பயன்படுத்த முயற்சி


தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களை ஒழித்துக்கட்டும் கோஷத்துடனும், அடுத்த ஆண்டு அமுலுக்கு வரும் சர்வ சிங்கள அமுல் திட்டத்துடனும் பொதுத் தேர்தலை 1964 ஆரம்பத்திலேயே நடத்திவிடுவதென ஆளும் கட்சியிலுள்ள பலர் அபிப்பிராயப்படுவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. சிம்மாசனப் பிரசங்க, வரவு—செலவுத்திட்ட வாக்கெடுப்புக் கண்டங்களிலிருந்து அரசாங்கம் தப்பிப் பிழைத்தால்தான் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதெனக் கருதுகின்றனராம்.

1964ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கும் 'சிங்களம் மட்டும்' நிர்வாகம் என்பதை வைத்துக்கொண்டு, சுதந்திரக் கட்சி தேர்தலில் இறங்க வேண்டுமென ஆளும் கட்சியிலுள்ள சிலருக்கிடையில் அபிப்பிராயம் இருந்து வருகிறதாம். சமீபத்தில் இந்த யோசனை பிரதமருடைய காது வரையில் சேர்க்கப்பட்டதாமென எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் அடுத்த ஆண்டின் முதற் கூறில் நடைபெற வேண்டுமெனவும் சிலர் கருதுகிறார்களாம்.

ஆளும் கட்சி இப்பொழுது ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. எந்த நேரத்திலும் கட்சியிலுள்ள ஒரு கூட்டத்தினர் காலைவாரிவிடக் கூடுமெனப் பிரதமருடைய ஆலோசகர்கள் கருதுகிறார்கள். இந்தப் பயப்பிராந்தியும், தமிழ் அரசாங்க ஊழி

(9-ம் பக்கம் பார்க்க)



கிழக்கு இலங்கையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களை ஈர்ந்திழுக்கும் சக்திவாய்ந்த மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் தீர்த்தோற்சவம் ஆடி அமாவாசை தினத்தன்று நடைபெற்றது. பக்தர்கள் புடைசூழ சுவாமி தீர்த்தமாடச் செல்வதையும், தீர்த்தக் குளத்தில் குமுமியிருக்கும் பக்தர்களையும் படம் காட்டுகிறது.

படம்: ஸ்டுடியோ லேக்

## வெற்றிப் பாதையில் திரு. வி. நவரெத்தினம்

திரு வே. அ. கந்தையா அவர்களின் மறைவினால் காலியாக்கப்பட்ட ஊர்காவற்றுறைத் தொகுதி இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு. வி. நவரெத்தினம் போட்டியிடுகிறார். தமிழரசுக் கட்சியின் தேர்தல் சின்னமான வீடே இவருடைய தேர்தல் சின்னமாகும்.

திரு. நவரெத்தினத்துடன் யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் திரு. ஏ. ஜி. இராஜசூரியரும் சுயேச்சை வேட்பாளராக முன்வந்துள்ளார்.

திரு. கந்தையா மறைந்ததும் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு வேட்பாளராக வருவதற்குப் பலர் எத்தனங்கள் செய்தனர். திரு. அல்பிரட் தம்பிஐயா, திரு. சி. சுந்தரலிங்கம் போன்ற

(8-ம் பக்கம் பார்க்க)



திரு. வி. நவரெத்தினம்

### விண்ணப்பங்கள் மறைந்த மாயம்

அஞ்சல் நிலைய அதிபர்கள் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கடந்த வருடம் நவம்பரில் கோரப்பட்டன. மொத்தம் 12,135 பேர் விண்ணப்பித்தனராம். இவற்றைப் பதிவு செய்வதற்காக காலங் கடந்தும் சில ஊழியர்கள் கடமையாற்றினராம்.

யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுடைய 70 பத்திரங்கள் காணவில்லையெனக் கூறப்படுகிறது. இவற்றுள் 3 பத்திரங்கள் சிங்களவர்களால் அனுப்பப்பட்டனவாம். இரண்டு விண்ணப்பதாரர்கள் (தமிழர்) தங்களுக்குள்ள சிங்கள மொழி பாண்டித்தியத்தையும் விண்ணப்பத்தில் காண்பித்துள்ளனராம்.

விண்ணப்பங்கள்யாவும் 15 ரூபாய் முத்திரையுடன், பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும், அவை காணமற்போனதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை.

## மலைநாட்டில் மாவட்ட சபைகள்

### சிங்களக் குடியேற்றத்துக்கு வழி வகுக்கும

மாவட்ட சபைகள் முதன் முதலில் கண்டிப் பகுதியில் அமைக்கப்படலாம் என்று தெரிகிறது. மலைநாட்டில் சிங்களக் குடியேற்றத்துக்கு இத்திட்டம் இலகுவான வாய்ப்பளிக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது.

மாவட்ட சபைகள் ஏற்பட்டால் தமிழ் பேசும் மக்களுக்குப் பலவகையான சலுகைகளும் உரிமைகளும் கிடைத்துவிடக்கூடிய சந்தர்ப்பம் உருவாகிவிடக் கூடும் என்று தீவிர சிங்களவாதிகள் மும்முரமாக எதிர்த்து வருகின்றனராம்.

(8 ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

# நடைமுறைத் தத்துவத்தை நாட்டுக்கு நல்கிய கவிஞன் பாரதி

# சமூகக் கொடுமைகளைச் சாட என்றுமே தவறியதில்லை

—"மணிமொழியாளன்"—

புதுமை இலக்கியத்தின் தந்தையாகிய மகாகவி பாரதியாரின் கவிதைகளிலும் உரைச் சித்திரங்களிலும் தென்படும் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் ஆராய்வதற்குரியன. பாரதிக்கு முற்பட்ட ஒரு சில கவிஞர்களும், சித்தர்களும் சமூகத்தளைகளை அறுத்தெறிய வேண்டிப் பாடியிருக்கிறார்கள். பாடியிருந்தும் பாரதியை மட்டும் சமூக சீர்திருத்தவாதி என்று சொல்வது ஏன்? பொது மக்களுக்குரிய காலமாகிய இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பாரதி காலத்திற்கேற்ப முன்னேற்றத்திற்கு வழி காட்டியதுதான் அதற்குக் காரணமாகும். உதாரணமாக அவருக்கு முற்பட்டோர்,

"சாதியாவது ஏதடா சலம்
திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ பூதம்
ஐந்தும் ஒன்றலோ
காதில் வாளி காரை கம்பி
பாடகம் பொன் ஒன்றலோ
சாதி பேதம் ஓதுகின்ற
தன்மை என்ன தன்மையே"

என்று பாடினார்களேயல்லாது,

தகரென்று கொட்டுமுரசே—
பொய்மைச்
சாதி வகுப்பினை எல்லாம்"

என்று பாடவில்லை. இது ஒரு வகையில் காலத்தின் போக்கிற்கேற்ப இலக்கியம் அமைகிறது என்பதைக் காட்டுகிறது எனலாம்.

### உட்கருத்தை தெரிந்து கொள்ள வேண்டும்

மக்கள் கவிஞனாகிய பாரதி சமுதாயத்தில் நிலவிய ஏற்றத் தாழ்வுகளையும் சிறுமைகளையும் கண்டு மனம் வருந்தினான். எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் "இந்தியா மக்கள்" என்றும் "இழிவு கொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே" என்றும் பாரதி பாடியதின் உட்கருத்தைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

சொந்த நாட்டிலே ஒரு பகுதியாரைத் தீண்டாதவர் என்று தள்ளி வைத்துக் கொண்டு சுயராஜ்யம் கேட்டது நகைப்பிற்கிடமான செயலாகும். சுயராஜ்யம் வேண்டும் என்ற பாரதவாசியை நோக்கி ஆங்கிலேயன் "ஜாதிச் சண்டை போச்சோ" என்று கேட்பதாக பாரதி எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது.

### சித்தர்கள் கருத்து

சமூக சீர்திருத்த நோக்கமும் தேசபக்தி ஆவேசமும் பாரதியை இந்நிலைக்குக் கொண்டுவந்தது எனலாம். மேலும் இராமலிங்க அடிகளின் "சாதி சமயச் சழக்கை விட்டேனருட் சோதியைக் கண்டேனடி—அக்கச்சி சோதியைக் கண்டேனடி" என்பது போன்ற கருத்துக்களும், "சாதி பேதங்கள்தனை அறியமாட்டாமல் வாதனையால் நின்று மயங்கினேன்" என்ற பட்டினத்தார் போன்ற சித்தர்களின் கருத்துக்களும் பாரதியைக் கவர்ந்தன எனலாம்.

"எனக்கு முன்பே சித்தர் பலர் இருந்தாரப்பா நானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்" என்று பாடிய பாரதி சித்தர்களைப் பின்பற்றியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் உரைச் சித்திரம் ஒன்றில் பாரத நாட்டில் உள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம். பிரிவுகள் இருக்காது" என்று பாரதி எழுதியிருப்பது வியப்பைத் தருகிறது. வியப்பைத் தந்தாலும் பாரதியின் கொள்கைகளையும் அவர் வாழ்ந்த காலத்தையும் வைத்துக் கொண்டு ஆராய்ந்தால் அவர் சநாதன தர்மத்தில் பற்றுள்ளவராய் இருந்ததையிட்டுக் குறை கூற முடியாது. காந்தி அடிகளும் இக்கொள்கையுடையவராய் இருந்தவர் என்பது கவனிக்கத் தக்கது.

இன்று இந்தியாவில் சட்டத்தினால் நீக்கப்பட்ட சாதி வேற்றுமை யதார்த்த வாழ்வில் புது வேகத்துடன் அரசியல் மூலமாகப் பரிணமிப்பதைக்காட்டிப் பலர் காந்தியின் கொள்கையைத் தவறென்பர். இவர்கள் இரத்தப் புரட்சி மூலமே சாதி வேற்றுமையை முற்றாக ஒழிக்கலாம் என்பதால் இதன் வன்மை மென்மைகளை இங்கு ஆராய்வதற்கில்லை.

### மனோவேகத்தைப் புலப்படுத்துகிறது

சமூக சீர்திருத்தவாதியாகிய பாரதி பெண் விடுதலை பற்றிப் பேசுவதற்குக் காரணம் அவர் வேதநாயகம் பிள்ளையின் பெண்மதி மாலையையும் அதுபோன்ற வேறு நூற்களையும் படித்ததுதான் என்பர் அறிஞர் இராசமாணிக்கனார். அத்துடன் புதுச்சேரி வாழ்க்கையும் வேதாந்த நோக்கமும் ஆங்கிலக் கல்வியும் அவரை இத்துறையில் ஈடுபடச் செய்தன எனலாம். அவரின் "புதுமைப் பெண்" என்ற கவிதையைப் போன்றதொரு கவிதையைத் தமிழிலக்கியத்தில் எங்குமே காண முடியாது.

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு ஆகிய நான்கு பண்புகளையும் போற்றிய தமிழினத்தை நோக்கி நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் என்று பாரதி கூறியது இருபதாம் நூற்றாண்டின் மனோவேகத்தைப் புலப்படுத்துகிறது.

### பெண்மை

பெண் என்றால் இன்பப் பொருள் என்றும், பெண்கள் அறிவில் குறைந்தவர்கள் என்றும் நம்பிவந்த ஒரு சமுதாயத்தைத் தட்டியெழுப்பி முன்னேற்றத்திற்கு வழி காட்டும் நோக்கத்துடனேயே "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ் வையகம் தழைக்குமாம்" என்றும் "பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை என்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை" என்றும் "பெண்டாட்டிதனை அடிமைப்படுத்த வேண்டிப் பெண் குலத்தை முழு தடிமைப் படுத்தலாமோ?" என்றும் பாரதியார் பாடினார்.

விதவை மணத்தைப் பற்றி அவர் கவிதை எழுதவில்லையாயினும் தன் கருத்துக்களை உரைச் சித்திரங்கள் மூலம் வெளியிட்டுள்ளார்.

### நெருப்பும் அனலும்

பிற்காலத்தில் பாரதிதாசன் விதவை மணத்தைப் போற்றி எழுதுவதற்குப் பாரதியின் இவ்வுரைச் சித்திரங்களே காரணமாய் இருந்திருக்க வேண்டும். பாரதி மிகுந்த ஆவேசத்துடன் விதவை மணத்தைப் போற்றி இருப்பதே அவரின் சமூக சீர்திருத்த நோக்கத்தை நன்கு புலப்படுத்துகிறது எனலாம்.

சமுதாய முன்னேற்றத்திற்கு வழி காட்டிய பாரதி மூட நம்பிக்கைகளும் மூட பக்தியும் இந்தியாவிலிருந்து ஒழிய வேண்டும் என்று விரும்பியதில் வியப்பில்லை.

சவரம் செய்வதற்கே நாள் நட்சத்திரம் திதி பார்க்கும் ஒரு சமுதாயம் எப்படி முன்னேற முடியும் என்று பாரதி கேட்பது கவனிக்கத் தக்கது. படிப்பினால் மட்டும் மூட நம்பிக்கை நீங்காது என்பதைப் பாரதி நன்கு அறிந்திருந்தார்.

### நடைமுறைத் தத்துவம்

ஆங்கிலக் கல்வி கற்ற இந்தியச் சீமான்கள் பரம வைதிகர்களாகத் திகழ்ந்தது பாரதியைப் புண்படுத்தியது. இவர்களைப் "பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்" என்றது சாலப் பொருந்தும்.

உண்மையான சாத்திரங்களை விட்டு விட்டு பார்ப்பனர் பாமர மக்களை ஏமாற்றி வந்தது பார்ப்பனராகிய பாரதிக்கு மனவருத்தத்தைக் கொடுத்ததினாலேயே தான் அவர்களை நோக்கி "நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு" என்று கூறச் செய்தது.

தங்குலத்தை அழிக்கும் கோடரிக் காம்பாகப் பார

(15-ம் பக்கம் பார்க்க)




கண்ணூறு, கண் எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடி விழுதல், நரையுண்டாகுதல் முதலிய வியாதிகளை நீக்கி தலைமயிர் அழகான கருநிறத்தில் இடைநெருக்கமாக வளரச்செய்கிறது. [illegible]

A 6 அவுன்ஸ் போ. 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லாக் குணங்களும் [illegible]

B 6 அவுன்ஸ் போ: விலை 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நொரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80, பு ஞ்செட்டித் தெரு
கொழும்பு 13.


## கவிதைப் பூங்கா

# ஆசையல்ல, அன்பு!

(ச. வே. பஞ்சாட்சரம்)

"மஞ்சினிற் குஞ்சு! வண்டினப் பேடை!
வண்டலிற் கண்டதோர் வஞ்சி!
நெஞ்சினிற் தங்கும் நீல்நிறத் தெய்வம்!
நீரிடைக் கருமலர்!" என்று,
பஞ்செனும் பாங்கிற் பாவிடென் னுள்ளம்
பாடிடும் காரெழிற் கன்னி!
கொஞ்சிடற் குந்தன் கொவ்வைகள் வேண்டாம்.
கொண்டவுன் சிந்தனை போதும்!

"வெள்ளையுன் உள்ளம்! வெள்ளையுன் பேச்சு!
வெள்ளமென் மீதிலுன் அன்பு!
கொள்ளையுன் கல்வி! கொள்ளையுன் பண்பு!
கோதிலை!" என்றெனும் போது
துள்ளிடுஞ் சிந்தை தோன்றிடும் எண்ணம்
சொல்லவா? ஆயிரங் கோடி!
கிள்ளையே, தந்தாய் தேன்நினைப் பின்பம்,
கேட்கயான் வேண்டுமோ இன்னும்?

கட்டிலில் உந்தன் பட்டுடல் தீண்டில்,
கற்றிடில் இல்லறப் பாடம்,
வட்டிலிற் சோறு மகவினுக் கூட்டில்,
மழலையிற் கண்டிடில் தெய்வம்,
தொட்டுனைத் தாலி கட்டிடல் வேண்டும்!
தோதிலை நானதற் கேழை!
எட்டிநின் றின்பம் நீபெறத் தொழுவேன்.
எய்திடற் கெண்ணுதல் ஆசை!

# கவிதை நெஞ்சம்

—யூ. எல். தாவூத்—

ஒரு கவிதை யொருபொன்னைப் பரிசி லீட்ட
உரியதில என்றிட்டார் மஹ்மூத்; ஈண்டு
ஒருகவிதைக் காயிரம் பொன் பரிசிலீயும்
ஓதரிய மன்செயலை வியந்தார் கவிஞர்.

கலை வரட்சி பிடித்த மஹ்மூத் நாட்டை
காணவே இசையவில கவிஞ ரிதயம்;
உளமுறை துன்போடு வேந்தை நோக்கி
உரைத்திட்டார் அகக்கருத்தை அவையின் முன்பு.

பார லீகப் பதிகண்ட
பண்பார் வேந்தர் சரிதையினை
யாரு மிந்தப் புவிமீதில்
என்றுங் காணுச் சுவைதேக்கி
பாரோர் போற்றும் போரழகு
பதிந்து கலையை முகிழ்க்கின்ற
பூரண மான ஷாஹ்நாமா
புனைந்தேன் கவிதை யமுதூட்டி;

உலகே வியக்கக் காத்திருக்கும்
ஓதரு மென்றன் நூலோர்ந்து
கலையி னிரசந் தேர்ந்திட்ட
காவல! உன்ற னன்புக்கு
உலமே கனிந்த நன்றியினை
உரைத்தேன்; கவிதைப் படையலையே
விலையின் பொருளாய் நினைந்திட்ட
வேந்தை நாடேன்;" கவிசொன்னர்.

ஏற்றம் மிக்க கலைவல்லோய்!
எண்ணப் பொதியை உணர்கின்றேன்
ஆற்றல் கொண்ட நூற்பேற்றம்
அறியச் செய்வே னன்னவனை
மாற்ற மேது மிசையாதிர்
மஹ்மூத் பரிசில் வழங்கயான்
சாற்றத் தவறேன்; கஜ்னவிக்கு
தயங்கா தே" என மன்னர்;

(தொடரும்)




வடலூரான், அனலைதீவு.

கே: யாழ்ப்பாணத் தொகுதியில் திருவாளர் கதிரவேற்பிள்ளை போன்ற, மக்களுக்காகப் பாடுபடுபவர்கள் இருக்க, திரு. துரையப்பாவை ஏன் தெரிந்தெடுத்தார்கள்?

ப: எட்டப்பர்களின் திருவிளையாடல்களைத் தெரிந்து கொள்ளவும் பொதுமக்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டாமா? அதற்காகத்தான்!

ஃ

கே. பாலன், உந்துடை.

கே: தற்போதைய மாணவிகள் பாடசாலைக்குச் செல்லும் பொழுது வெளிப்படையாக, துப்பறியும் நாவல்களை வாசித்துச் செல்கின்றனர். காரணமென்ன?

ப: தங்களைச் சுற்றி வட்டமிடும் நபர்களின் பின்னணியைக் கண்டு பிடிக்க நாவல்களில் வரும் துப்புத்துலக்கும் முறைகளைப் பயன்படுத்துவதற்காக......

ஃ

இ. சுந்தரலிங்கம், மல்லாகம்

கே: தொண்டமான் காங்கிரசை ஆதரிக்கும் ஒரு தினசரி எங்கள் 'தொழிலாளர் கழக'த்தின் செய்திகளை மறைப்பதின் மர்மம் என்னவோ?

ப: அக் காங்கிரஸைச் சேர்ந்த அங்கத்தினர்களும் ஆதரவாளர்களும் கூட்டம் கூட்டமாக இ. தொ. கழகத்தின் கொடியின் கீழ் அணி திரளுவதுதான் மர்மம். உள்ளங்கையால் சூரியனை மறைக்க முடியுமா?

ஃ

செ. ந. முத்தையா, அ. குயினு தோட்டம், பொகவந்தலாவ

கே: 1964ம் ஆண்டு முதல் சிங்களம் முழு அமுலைப் பெறப் போகிறதாமே. இதுபற்றி திரு. தொண்டமான் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே ஏன்?

ப: தமிழர்களின் மொழியுரிமையைப் பற்றி என்ன, வேறு எந்த உரிமையைப் பற்றித்தான் அவர் பேசினுர்? போராடினுர்? எம்.பி. பதவி உண்டு—அவர் உண்டு. உரிமை விவகாரங்களுக்கெல்லாம் அவரை இழுத்துப் போட்டு சங்கடப்படுத்தாதீர்கள்!

ஃ

இஸட். ஆர். ஹுசேன், திருமலை

கே: கிழக்கு இலங்கையில் தேனும் பாலும் ஓடச் செய்யச் சிலர் பிரதமரைச் சந்தித்துப் பேசினுர்களாமே!

ப: கிழக்கு இலங்கையை அபிவிருத்தி செய்து விட்டுத்தான் மூச்சு விடுவோம் என்று ஒரு சுயநலக் கும்பல் கிளம்பியுள்ளது. அந்த உதிரிகளும் டேவிட் சிங்கோ, பீரிஸ் சில்வா ஆகியோரும் பிரதமரிடம் 'அபிவிருத்தி'யைக் கேட்டனர். அவர் உடனே 'அபிவிருத்தி'யைத் தூக்கிக் கொடுத்துவிட்டார். என்ன தெரியுமா? கிழக்கு மாகாணத்துச்குச் சிங்கள ஆசிரியர் அனுப்புவதும், சிங்கள 'சிறி' பொறிக்கப்பட்ட பஸ்களை அனுப்புவதும்! எப்படியிருக்கிறது கிழக்கு இலங்கை 'அபிவிருத்தி'?

ஃ

இ. குகதாசன், கோப்பாய்

கே: ஆட்சியாளர் சிங்கள மொழியிலேயே சகல வேலைகளையும் செய்து வந்தால் தமிழ் மொழி மட்டும் தெரிந்த தமிழரின் கதியென்ன?

ப: அதற்கு வழியுண்டு, தமிழரசு நிறுவிக் கொண்டால் தமிழிலேயே அலுவல்களை நடத்தலாமல்லவா?

ஃ

க. கிருஷ்ணகுமார்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13

கே: இலங்கையின் தற்போதுள்ள பொருளாதாரம் முன்னேற முக்கிய வழி என்ன?

ப: அதற்கு வழி மக்களின் ஒத்துழைப்பைப் பெறுதல்; அதற்கு வழி மொழிப் பிரச்சினையைத் தீர்த்தல்; அதற்கு வழி தமிழுக்கு ஆட்சி அந்தஸ்து அளித்தல்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விஞக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

கே: இலங்கை சமசமாஜக்கட்சி தனது மொழிக் கொள்கையை மாற்றிய காரணம் என்ன?

ப: பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துப் பல ஆண்டுகளாக வளர்த்த கொள்கையைச் சந்தர்ப்பவாதத்துக்குப் பலியிட்டுவிட்டார்கள் ச. ச. தலைவர்கள்.

ஃ

க. சண்முகநாதன், வட்டக்கச்சி

கே: 'தனிப்பெருந்தலைவ'ரின் உருவச் சிலையை அமைக்க யோசனை செய்யும் யாழ். நகர மக்கள், தலைப்பாகை அவர்களின் சிலையையும் அமைத்தால் என்ன?

ப: எதிர்கால சந்ததிகளும் பச்சைத் துரோகங்களை மறவாதிருக்க எட்டப்பர் கூட்டத்துக்கே சிலை எழுப்பச் சொல்லுவீர் போலிருக்கிறதே!

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்

கே: இந்த மாவட்ட சபையினுல் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைக்கும் பலன் என்ன?

ப: தமிழ்ப் பிரதேசத்தில் பூரண பிரதிநிதித்துவம் கொண்டதாக மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டு, தமிழ் மொழியையும் அதன் நிர்வாக மொழியாக்கினுல் தமிழுக்கும் ஓரளவு நிர்வாக அந்தஸ்து ஏற்படலாம்.

கே: இப்பொழுது வட மாகாணத்தில் கம்யூனிஸ்டுக்கட்சியின் சிறு சிறு கூட்டங்கள் வைக்கிருர்களே ஏன்?

ப: கொம்யூனிஸ்டுக் கட்சிக்குள் சீனுவை ஆதரிக்கும் கோஷ்டிதான் இம்மாதிரிக் கூட்டங்களை நடத்தித் தங்கள் கோஷ்டியைப் பலப்படுத்துகிறது. பின்னர் இக் கோஷ்டி பிரிந்து தனிக் கட்சி அமைத்துக் கொள்ளும். பெல்ஜியத்தில் கொ. கட்சி இரு கூருகப்பிரிந்துவிட்டது. இத்தாலியில் பிரியும் தறுவாயிலிருக்கிறது. இலங்கைக் கொ. கட்சியும் விரைவில் துண்டுபட்டுவிடும்.

ஃ

க. ச. க. பிள்ளை, கொழும்பு-6

கே: உதவித் தாதிமாரின் சேவை நிபந்தனைகளை மாற்றுவது பிழையென்று வாதாடும் சில சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1956க்கு முன் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியரின் சேவை நிபந்தனையை மாற்றி, சிங்களத் தகுதி காணும் பரீட்சையில் தேற வேண்டுமென்று அரசாங்கம் விதித்திருப்பதை ஏன் எதிர்க்கவில்லை? இதுதான் இலங்கையில் நடைபெறும் ஜனநாயகமா?

ப: நீங்கள் கூறும் சில சிங்கள எம்.பி.கள் உதவித்தாதிமார் விஷயத்தில் சிரத்தை காட்டுவதின் நோக்கமே வேறு. அவர்களுடன் இந்த எம். பி. கள் உல்லாசப் பிரயாணம் போவதாகவும் வாடி வீடுகளில் தங்கியதாகவும் புகார் செய்யப்பட்டிருப்பதிலிருந்தே விஷயம் அம்பலத்துக்கு வந்துவிட்டது. தமிழ் அரசாங்க ஊழியர்களின் சேவை நிபந்தனையை மாற்றியமைப்பதை அவர்கள் எதிர்க்காத காரணம்—அதனுல் தமிழ் மொழியை அழிக்க முடியும் என்பதே!

ஃ

ஜெயம், அல்வாய் மேற்கு

கே: அவள் ஒரு தமிழ் மாது. தலை பாகவதர் வெட்டு. அரசாங்க ஆங்கில சுருக்கெழுத்தாளர். உண்பது தமிழ் உணவு முள் — கரண்டி உதவியுடன். தமிழ் சக ஊழியர்களுடன் உரையாடல் ஆங்கிலத்தில், சிங்களவர்களுடன் சிரித்துப் பேசுவது சிங்களத்தில். காரணம் என்னவோ?

ப: மேனுட்டு நவநாகரிக நங்கை என்பதைக் காட்டிக் கொள்ளவே முடிவெட்டும், முள்—கரண்டியில் சாப்பாடும், ஆங்கிலப் பேச்சும்—இது அறியாமை. தமிழ் உணவு பழக்க தோஷத்தின் விளைவு—பெற்ருேர் அசல் தமிழர்கள் என்பதை இது காட்டிக் கொடுத்து விடுகிறது. சிங்கள ஆடவர்களுடன் சிரித்துச் சிங்களத்தில் பேசுவது அவர்களின் உள்ளத்தைத் தொடக் கையாளும் உபாயம்—இதில் அநேகமாகக் கிடைப்பது ஏமாற்றந்தான். மொத்தத்தில், இம்மாது பண்புக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டவர்.

ஃ

சி. நாயகதாஸன்,
வெள்ளவத்தை

கே: சி! சி! வெட்கக்கேடு! மந்திரியுடன் எடுத்த படமும் வெளிவரவில்லையே! இதை இனிமேல் வீட்டுச் சுவரில் தூக்கிவிடுவாரா?

ப: வீட்டுச் சுவரில் மாட்டினுல் மனைவியும் குழந்தைகளும் மட்டுமே பார்த்து ரசிக்க முடியும். இப்படத்தின் 'பிளாக்' ஏற்கனவே எடுக்கப்பட்டிருப்பதால், ஒரு பத்து இலட்சம் துண்டுப் பிரசுரங்களில் இந்தப் 'பிளாக்'கை அச்சிட்டு நாடு பூராவும் விநியோகம்செய்துவிடலாமே!

ஃ

எச். எஸ். எம். அலியார்,
நீர்கொழும்பு

கே: உப்பு கார்ப்பரேஷன் 3 ஆண்டுகளில் 25 லட்ச ரூபாயை விழுங்கிவிட்டதாமே!

ப: உப்பு கரைவதைப் போலப் பணமும் கரைந்துவிட்டதோ! ஆனையிறவு உப்பளத்தை அபிவிருத்தி செய்திருந்தால் இந்த நஷ்டம் வருமா?

ஃ

எல் டி. குமார்,
கொழும்பு—3.

கே: சிம்மாசனப் பிரசங்கம் பற்றி நீங்கள் என்ன கூறப் போகிறீர்கள்?

ப: இப்பிரசங்கத்தில் 42 விஷயங்கள் அடங்கியுள்ளன. அவற்றில் 29 விஷயங்கள் "அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது, கருதுகிறது, பாதை செப்பனிட்டுள்ளது, எதிர்பார்க்கிறது" என்ற கருத்துள்ள சொற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. "ஆராயப்படும்" என்று மூன்று விஷயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய 10 விஷயங்களிலும் கூறப்பட்டிருப்பதெல்லாம் ஏற்கனவே தொடங்கப்பட்டு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றியே!

ஃ

சி. வடிவேலு, பதுளை.

கே: மாவட்ட சபை அமைக்கப்பட்டால் என்னென்ன அதிகாரங்களை அதற்கு வழங்குவார்கள்?

கே: எந்த அதிகாரங்களை வேண்டுமாஞலும் வழங்களாமே! ஒரு காலத்தில் தென்னகத்தில் திருநெல்வேலி மாவட்ட சபை (ஜில்லாபோர்ட்டு) திருநெல்வேலிக்கும் திருச்செந்தூருக்குமிடையே ரெயில் போக்குவரத்தைக் கூட பொறுப்பேற்று நடத்தியதே!

## ஆனந்தா! விபுலாநந்தா!!

—திமிலைத்துமிலன்—

வாவி நீள்புனல் பாடு மீனெடு
 மானு மஞ்ஞையு மாடிடும்
கூவி டுங்கிளி கோகு லத்துடன்
 கொஞ்சி டும்அணில் கெஞ்சிடும்
காவி லும்தயிர் பாலி லும்நிகர்
 காணெ ணுவள நாட்டிலே
ஆவி வந்துகொல் நீபி றந்தனை
 ஆனந் தாவிபு லாநந்தா!

வண்ணநா ரைகள் நண்ணுநீர் நிலை
 வாளை மீன்விளை யாடலால்
கிண்ணை மேலுறு சின்ன மந்திகள்
 கீழ்விழுந் துடன் மேலெழும்
புன்னை மேலுறு கிள்ளை பேசுதல்
 பூவை யாகுர லோவென
அண்மி நோக்கிடு நாட்டி லேவளர்
 ஆனந் தாவிபு லாநந்தா!

வெள்ளி வீதியிற் றிங்கள் வெண்குடை
 மேலெ ழுந்திடும் போதிலே
துள்ளி நீந்திடு மட்டு நீர்நிலை
 தோன்று மேழிசை மங்கையர்
அள்ளி வந்திடு வின்ப வின்னிசை
 ஆடி னுய்தமிழ் பாடினுய்
கொள்ளை கொண்டெமை யீர்க்கும் யாழ்தரு
 கொண்ட லேவிபு லாநந்தா!

முத்த மிழ்க்கொரு வித்த காதமிழ்
 மூத்தசந் ததி வாழுமா?
நித்தம் வாழுநின் காற்சுவட்டிலே
 நிற்கும்வித் தகர் தோன்றினுல்
சுத்த சத்தியே சூழுக அருட்
 தோன்றல் கள்ளுரு வாகுக
நித்தம் நின்வழி பேணுக அருக
 நீடு கவிபு லாநந்தா!

வாழ்க செந்தமிழ் வாழ்க வையகம்
 வாழ்க வேவிபு லாநந்தத்
தாழ்வி லாநெறிஓங்கு கதமிழ்ச்
 சால்பு கெட்டவர் நீங்குக
சூழ்க நல்லருள் அன்பு மெய்ந்நெறி
 தொல்லை நீங்குக தாய்க்குலம்
வாழ்க செந்தமிழ் வாழ்க செந்தமிழ்
 வாழ்க செந்தமிழ் வாழ்கவே!



# ரிஷி லேகியம்

**ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்**

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌத்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-00**
**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# இன ஒற்றுமை இன்மையே நாட்டின் அடிப்படை நோய்

## செனெட் சபையில் திரு. நல்லையா

நாட்டின் ஆகப் பெரிய, அடிப்படை நோய் இங்குள்ள இரு பெரிய இனங்களிடையே நிலவும் ஒற்றுமையின்மையே. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. இதைப் போன்ற பெரு நோக்கத்துக்காகவே சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் கடுமையாகப் போராடினர். இந்த ஒற்றுமையின்மைக்குத் தீர்வு காண்பதே உடனடித் தேவையாகும்.

இவ்வாறு, அரியணை உரை மீது, செனட் சபையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சி செனேட்டர் திரு. ஜீ. நல்லையா குறிப்பிட்டார். இலங்கையிலுள்ள இரு வேறு இனங்களிடையேயும் பல வேற்றுமைகள் நிலவி வருவதால், இவ்விரு இனங்களிடையேயும பரஸ்பர நல்லுறவு இருப்பதாக எவரும் கூற முடியாது என்றும் அவர் தமது பேச்சில் கருத்துத் தெரிவித்தார்.

### உறுதி எங்கே?

செனேட்டர் சு. நடேசபிள்ளைக்கும், வேறு சில தமிழ்ப் பிரமுகர்களுக்கும், இத்தகைய பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட சபைகள் நிறுவப்படும் என்று அரசாங்கம் உறுதி அளித்ததாகத் தெரிகிறதென்றும், ஆனால், மாவட்ட சபைகள் நிறுவுதல் பற்றிப் பரிசீலனை செய்யப்படுமென்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் திரு. நல்லையா தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டார்.

### ஆங்கிலப் பேச்சு

தமிழ் பேசும் மக்கள் சார்பாகப் பேசிய திரு.சு. நடேசபிள்ளை, தமது கன்னிப் பேச்சை ஆங்கிலத்திலேயே நிகழ்த்தியது துரதிர்ஷ்டமானதொன்றாகும் என்று கூறிய திரு. நல்லையா, திரு. நடேசபிள்ளை ஆங்கிலத்தில் பேசியது பிரதம மந்திரியின் வற்புறுத்தல் காரணமாகவேயென்றும், இவ்விதம் மற்றவர்களுடைய வற்புறுத்தலுக்காக ஒருவர் தமது சுயகௌரவத்தையே விட்டுக் கொடுப்பது சரியல்லவென்றும் மேலும் குறிப்பிட்டார்.

இச்சமயத்தில், செனேட்டர் சு. நடேசபிள்ளை பேச்சில் குறுக்கிட்டு, தாம் ஆங்கிலத்தில் பேசியது தமது சொந்த விருப்பின் பேரிலேயேயன்றி மற்றவர்கள் வற்புறுத்துதலின் பேரில் அல்லவென்றும், ஆங்கிலத்தில் பேசுவதன் மூலம் சபைக்குத் தமது கருத்துக்களைத் தெளிவுற விளங்க வைக்க முடியுமென்பதனாலேயே பேசினாரெனவும், தாம் ஆங்கிலத்தில் பேசியதற்கு விளக்கம் தெரிவித்தார்.

### குற்றம் சுமத்தவில்லை

செனேட்டர் நடேசபிள்ளை மீது தாம் குற்றம் சுமத்தும் வகையில் எதையும் கூறவில்லையென்றும், அவரது விளக்கத்தைத தாம் ஏற்றுக் கொள்வதாகவும் செனேட்டர் நல்லையா பதிலளித்தார்.

செனேட்டர் நல்லையா தமது பேச்சில் தொடர்ந்து கூறியதாவது: 'யூ. என். பி. அரசாங்கத்தில் ஓர் மந்திரியாக இருந்த திரு. நடேசபிள்ளை, யூ. என். பி. யின் களனி மாநாட்டில், சிங்களத்தை அரச மொழியாக்குவதற்கான பிரேரணைக்குத் தாம் கொண்டு வந்த திருத்தத்தைக் கட்சி ஏற்றுக் கொள்ளாததினால், மந்திரி சபையிலிருந்து ராஜினாமாச் செய்தது மாத்திரமல்ல, ஜனப்பிரதிநிதிகள் சபையில் 'அருமையான சொற்பொழிவொன்றும் ஆற்றியிருந்தார்.'

### நெருக்கடியான நிலைமை

"இன்று ஓர் நெருக்கடியான நிலைமையை நாடு எதிர்நோக்கியுள்ளது. அகப் பொருள்களின் விலை எல்லாம் உயர்ந்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் உச்ச நிலையிலுள்ளது. நாட்டின் பொருளாதாரத் துறையின் ஒவ்வொரு பகுதியிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மொழிப் பிரச்சினை, சிறுபான்மையோர் உரிமைப் பிரச்சினை ஆகிய பிரச்சினைகளும் இருந்த போதும், அரசியல் வாதிகள் அவற்றைத் தமது சொந்த நலனுக்காகவே பயன்படுத்துகின்றனர். முக்கியமான, மோசமான பிரச்சினைகளை விட்டுவிட்டு, உணர்ச்சி வயமான மொழிப் பிரச்சினைகளைப் பற்றியே மக்களிடம் சொல்லி வருகிறார்கள். வருடம் மாறி வருடமாக, அரியணை உரையில் "இப் பிரச்சினைகளை அரசாங்கம் கவனித்து வருகின்றது" என்று மட்டுமே குறிப்பிடப்படுகின்றது. இது வெறும் அரசியல் சந்தர்ப்பவாதமே.

### அடிப்படை நோய் ஒற்றுமையின்மை

நாட்டின் ஆகப் பெரிய, அடிப்படை நோய் இங்குள்ள இரு பெரிய இனங்களிடையே நிலவும் ஒற்றுமையின்மையே. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. இதைப் போன்ற பெருநோக்கத்துக்காகவே சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் கடுமையாகப் போராடினர். இதுதான் — இந்த ஒற்றுமையின்மைக்குத் தீர்வு காண்பது தான் — உடனடித் தேவையாகும். அதிகாரத்தில் இதுவரை இருந்த எந்தவொரு கட்சியும் இப்பிரச்சினைக்கு முடிவு காண முயன்றதாகத் தெரியவில்லை. அவர்கள் கவனம் எல்லாம் வாக்குச் சீட்டின் மீதே. எந்த வகையிலும் அதிகார பீடத்தை இறுக்கிப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம் எல்லாம்.

தென் வியட்னாமில் நடைபெற்ற அக்கிரமங்களை நாம் கண்டித்துள்ளோம். இது ஏனெனில், நாம் அங்குள்ள மக்களுக்காக உண்மையிலேயே அனுதாபப்பட்டமையினாலேயே. அதே நேரத்தில், பௌத்த சமயத்தின் பாதுகாவலர் எனப்படும் சிலர், உணர்ச்சிவசமான பேச்சுக்களை ஆற்றுவதையும் காண்கிறோம் 'சத்தோலிக்க நடவடிக்கை இயக்கம்' என்பதன் கீழ் நடைபெறும் நடவடிக்கைகள் பற்றிக் குற்றம் சுமத்தப்படுகின்

(9-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையையும் பௌத்தத்தையும் பாதுகாக்க முயற்சி

### 16வருடங்களுக்கு முன்......

"இலங்கையின் சுதந்திரத்தைத் தடுக்க இடதுசாரிகள் முயற்சி செய்கின்றனர். சிங்கள மன்னர்களின் சிங்கக் கொடிக்குப் பதில் அவர்களின் அரிவாள், சம்மட்டிக் கொடியை உயர்த்த முயற்சிக்கிறார்கள். இந்த இடதுசாரிகள் நாட்டில் குழப்பத்தை உண்டாக்குவதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும்" இவ்வாறு களனியில் நேற்று நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் திரு டி. எஸ். சேனநாயக்கா பேசினார்.

புராதன சிங்களக் கொடியான சிங்கக் கொடியை திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஏற்றி வைத்துப் பேசுகையில், 'இப்பொழுது இடதுசாரிகளினால் புத்த மதத்திற்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. இந்நிலையிலிருந்து பௌத்த மதத்தைக் காப்பாற்ற வேண்டும்' என்று கூறினார்.

"டொமினியன் அந்தஸ்துக் கிடைத்தது. இலங்கையில் துட்டகமுனு ராஜ்யம் வந்துவிடும்" என்று திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசினார்.

### அமெரிக்காவிலுள்ள ருஷ்ய ஸ்தானிகர்

#### மாஸ்கோ செல்லும் மர்மமென்ன?

நியூயோர்க், ஜூலை, 26

அமெரிக்காவிலுள்ள சோவியத் ஸ்தானிகர் நவிகப் இன்று மாலை மாஸ்கோவுக்குப் பயணமானார். ருஷ்ய சர்க்காருடன் கலந்து பேசப் போவதாகத்தெரிவித்தாரே யொழிய வேறு எவ்வித காரணமும் சொல்ல மறுத்து விட்டார்.

### பெர்னட்ஷா பிறந்த தினம்

அயாட், ஜூலை, 26

ஆங்கில அறிஞரும் நாடக ஆசிரியருமான ஜார்ஜ் பெர்னட்ஷா, தமது இல்லத்தில் இன்று யாதொரு விதமான கொண்டாட்டமுமின்றிப் பிறந்த தினத்தைக் கழித்தார். பிறந்த தினக் கொண்டாட்டங்களை அவர் வெறுக்கிறவர்.

தலையங்கம்:

### தமிழர் கடமை

................பின் ஆங்கிலேயர் வந்தனர். அவர்களது ஆட்சியிலும் முதன் முதல் பிரதிநிதி முறை, சட்டசபையில் வழங்கப்பட்டபோது இலங்கை முழுவதற்கும் ஏகப் பிரதிநிதியாக சர். பி. இராமநாதன் அவர்கள் சிங்கள—தமிழ்ப் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பிறகு தேசிய மகா சபையை சர். பி. அருணாசலம் உண்டாக்கியதும், கொழும்பு ஸ்தானத்துக்கு அபேட்சகராக வந்ததும், சிங்கள அரசியல்வாதிகளின் வகுப்புவாதக் கூச்சலால் யாழ்ப்பாணத்துக்கு அவர் ஓடியதும், தமிழர் மகாஜன சபையை உண்டாக்கியதும் யாவருக்கும் தெரிந்ததே!

இதிலிருந்தே வகுப்புவாதம் ஆரம்பமாகியது. சிங்கள அரசியல்வாதிகளால் அன்று விதைக்கப்பட்ட நோயைத் தடுப்பதற்கே இன்று தமிழர் முனைந்து நிற்கின்றனர்.

......நாம் நீண்டகாலமாக தமிழர்—சிங்களவர் என்னும் வகுப்புப் பிரிவாகவே வாழ்ந்து வந்திருக்கிறோம். இதை இலகுவில் அரசியல் பொருளாதார நோக்கத்தால் மாற்ற முடியாது. அதுவும் தமிழர் சிறுபான்மையினராகவிருக்கும் பொழுது மிகவும் கடினம்.

................

**சுதந்திரன் 28-7-1947**


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.


## சந்தியில்....

"சிங்கள மொழியில் மட்டுமே கடமை பார்ப்போம். வேறு மொழிக் கடிதங்களையோ தஸ்தாவேஜுகளையோ தீண்டமாட்டோம்" என்று அடம்பிடித்து வெற்றிகண்ட சிங்கள அரசாங்க ஊழியர்கள் "சிங்கள இனத்தைச் சேராத எவரையும் எங்கள் இலாகாவில் கடமை பார்க்க விட மாட்டோம்! சிங்கள இனத்தவரல்லாத எவருக்கும் நாங்கள் சேவை செய்ய மாட்டோம்!" என்றெல்லாம் கோஷமெழுப்பி அதற்காக ஒரு போராட்டமும் நடத்தத் திட்டமிட்டுள்ளனராம்.

●

அரசாங்க ஊழியர்கள் எத்தனை முயற்சி எடுத்து சிங்களம் படித்தாலும், அவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் வெறும் கண்துடைப்புக்காகவேயிருக்கும் என்பதற்கு ஒரு உதாரணம் எமக்குக் கிட்டியுள்ளது:

தபால் பகுதியில் ஒரு தமிழ் உயர்தர அதிகாரிக்கு குறிப்பிட்ட காலத்தில் ஏழாம் வகுப்பு சிங்களம் சித்தியடைந்துவிட வேண்டும் என்ற ஒப்பந்தத்துடன் ஒரு உயர் பதவி கொடுக்கப்பட்டது. அவரும் தமக்குக் கிடைத்த வாய்ப்பை இழந்துவிட விரும்பாது தீவிரமாகச் சிங்களம் படித்து ஏழாம் வகுப்புக்கும் மீறிய சிங்கள அறிவைப் பெற்றுக் கொண்டார். சோதனையும் எடுத்து விட்டார்.

நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற அவரை, உத்தியோகத்தின் பெறுமானத்தை உணர்ந்த பரீட்சை (முழுச் சிங்கள வாதிகளான) அதிகாரிகள் கேலியும் கிண்டலும் செய்து விரட்டி விட்டனராம் இவருக்கு வேண்டுமென்றே குறைந்த புள்ளிகளையும் கொடுத்திருக்கின்றனர்.

'உமக்களிக்கப்பட்ட பதவிக்குத்தேவைப்பட்ட தகுதி உம்மிடம் இல்லாமையினால் நீர் பதவியை விட்டு விலகிக் கொள்ளலாம்'' என்று உத்தரவு ஒன்றையும் அவருக்கு அனுப்பியுள்ளனராம்.

'எமது இனத்தை இம்சித்து வரும் இன வெறியர்களின் சூழ்ச்சிகளை நம்பி என் போன்று இன்னும் எத்தனை துரோகிகள் பாடம் படிக்கின்றனரோ தெரியாது. தலைவர்கள் சொற் கேட்டு எல்லோரும் ஒன்றுபட்டு சிங்களத்தைப் படியாது விட்டிருந்தால் மானம் இழக்காது தலை நிமிர்ந்து உரிமையுடன் வாழலாமே'' என்று அவர் இன்று மனம் வெதும்புகின்றாராம்.

●

தபால் இலாகாவில் கணக்காளர் பதவியிலுள்ள ஒருவரும் அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் 3ம் வகுப்பு சிங்களம் சித்தியடைந்தும், தனக்கு எத்தனையோ படி கீழுள்ள நிலையிலிருந்த பல சிங்கள ஊழியர்கள் தம்மைவிட மேல் நிலைக்குப் போய் விட்டதைக் கண்ணுற்று, 'இனத்துக்குத் துரோகம் செய்தோமே' என்று ஏங்குகிறாராம்.

—அம்மான்

# சந்தர்ப்பவாதத்துக்கு இடமளிப்பதல்ல தமிழரசுக் கட்சி

## மலையக மக்களின் நம்பிக்கையை அதுவே சம்பாதிக்கும்

தமிழர் மத்தியில் தமிழரசுக் கட்சி உதயமாவதற்கு மூலகாரணமே மலையகத் தமிழ் மக்கள் தான். தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது, அதனை எதிர்த்துத் தமிழ்த் தலைவர்கள் உரிமைகளை மீண்டும் பெறத் தமிழர் தலைவராம் திரு. செல்வா தலைமையில் அணிவகுத்தனர்.

"மலை நாட்டு மக்களின் மறைந்த உரிமைகளை மீட்டுத் தருவேன் என்று சத்தும் அம்மையாரின் ஆதரவாளர் திரு. தொண்டமான், தமிழ்த் தெரியாத் தலைவர் ஜனுப் அஸீஸ் போன்றோர்களைவிடப் பன்மடங்கு அரிய சேவைகளை மலையகத் தமிழ் மக்களுக்காகச் செய்து வருகிறது தமிழரசுக் கட்சி.

திரு. தொண்டமான் உளப் பூர்வமாக தமிழ் மக்களுக்காக உழைத்திருப்பின் அன்று தமிழுரிமை வேண்டி சத்தியாக்கிரகம் செய்த போது ஒத்துழைத்திருப்பார்.

### அன்று ஒத்துழைத்திருந்தால்?

இலங்கையில் மிகப்பெரிய தொழிலாளர் சங்கத் தலைவரானவர் அன்று தமிழரசாரோடு ஒத்துழைத்திருந்தால்

### 'வேலேந்தி'

உரிமைகள் உடனே கிடைத்திருக்கும். அவ்வாறு செய்யச் சுயநலம் அவருக்கு இடம் கொடுக்கவில்லை.

கடந்த தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தமிழரசுக் கட்சி ஒரு சந்தர்ப்பவாதக் கட்சியாக இருந்தால் யூ.என்.பி.யோடு சேர்ந்து ஆட்சி நடத்தியிருக்கும். ஆனால் கொள்கையினின்றும் சிறிதும் பிறழாத தந்தை செல்வா அவர்கள் திரு. டட்லியின் பசப்பு வார்த்தைக்கு மயங்கவில்லை.

'வட,கிழக்குப் பகுதிகளுக்குப் போதிய தமிழ் உரிமை தருவதாகவும் மலையக மக்கள் பற்றிய இந்தியர் பிரச்சினையை மலையகத் தலைவர்களுடன் பேசித் தீர்ப்பதாகவும் கூறிய டட்லி முன் மலையக மக்களின் பிரச்சினையை முதலாவதாக வைத்தார் தமிழரசுத் தந்தை.

டட்லி மறுக்கவே, அன்று அவ்வுரிமைகளைத் தருவதாக உறுதி மொழியளித்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோடு சேர்ந்து யூ. என். பி. யைத் தோற்கடித்தார். இன்று உறுதி மறந்து உளறித் திரியும் அரசாங்கத்தை அதட்டிக் கேட்டு வருவது தமிழரசுக் கட்சியொன்றே!

### தமிழரசுக் கட்சி கைவிடாது

எனவே என்ன இன்னல் நேர்ந்தாலும் தமிழரசுக் கட்சி மலையக மக்களைக் கைவிடாது.

தமிழருக்கு உரியன தருகிறோம் என்று அரசாங்கம்

(13-ம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் தமிழரசு!

—0—

—வேந்தன்,
மஸ்கெலியா—

மலையகத்தில் எத்தனையோ தொழிற் சங்கங்கள் செயல்படுகின்றன. இருந்தும் இன்னும் பிரச்சினைகள் இருந்துகொண்டே தான் இருக்கின்றன.

இந்த நிலையில் இங்கு நிலைத்திட நினைத்து வந்துள்ள தமிழரசு தனது இலங்கை தொழிலாளர் கழகத்தால் எதை செய்யப் போகிறது — என்று எண்ணமிடும் பலர் இங்குண்டு! என்ன செய்யப் போகிறது என்பதைவிட என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவது எமது கடமையாகும் — அது வெற்றி தரும் வழியாகவும் அமையும்.

வடக்கு கிழக்கு — மாகாணத்தில் உள்ளவர்கள் மட்டும் தான் தமிழ் பேசும் மக்கள் மற்றவர்கள் தமிழ்தான் பேசுகிறார்கள், ஆனால் யாரோ தெரியாது என அதிகார வர்க்கம் எண்ணமிடுவது அதன் செயல்களிலே நன்கு வெளியாகின்றது.

இத்தகைய தகாத எண்ணத்தை ஏற்படச் செய்தது மலையக மக்கள் ஊமையாக — அனாதைகளாக இருக்கும் நேரத்திலே வடக்கிலும் — கிழக்கிலும் மக்கள் அடிபட்டும் — உதைபட்டும் உரிமையைக் காத்திட முன் வந்ததாகும். இந்த அரசியல், இன உணர்ச்சிகளை மலையக மக்களுக்கு நிச்சயம் தமிழரசு ஊட்டும் என்பதில் சந்தேகமே இல்லை. உணர்ச்சியற்று வாழ்ந்து உரிமைகளை இழப்பதைவிட உணர்ச்சியால் உயிரிழந்தாலும் உயிரோடிருப்பவராவது உரிமைகளைப் பெற்றிடல் வேண்டும் என்ற நல்லெண்ணம் வேண்டும்.

மலையகத்தில் தமிழரசார் — கல்வி — சமூகப் புரட்சி செய்ய முன்வர வேண்டும். "நீ படித்து புல் வெட்டத் தானே போகிறாய் — தமிழ் படித்து என்ன பயன் சிங்களம் படி" என்று கூறும் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களை — நம் வழிக்கிழுத்து இன உணர்வை, மொழியுணர்வை வளர்க்கச் செய்ய வேண்டும்.

இந்தச் சேவையை எந்தத் தொழிற் சங்கமும் இதுவரை செய்யவில்லை ஆகவே தமிழரசார் இத் துறையினைப் பயன்படுத்திட்டால் நிச்சயம் வெற்றியுண்டு.

## சிங்கள ஆசிரியையை பதவியிலிருந்து நீக்குக!

### லுணுகலையில் பெற்றோர் எதிர்ப்பு

லுணுகலையிலுள்ள தமிழ்க் கலவன் பாடசாலை யொன்றில் அண்மையில் சிங்களம் படிப்பிக்க நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியை ஒருவரை அப்பாடசாலையிலிருந்து நீக்கிவிடுவதற்கு அப்பாடசாலை மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள். தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் மூலமாக அரசாங்கத்திற்கு வேண்டுகோள் ஒன்றும் அனுப்பியுள்ளார்கள்.


இப் பாடசாலை மாணவ மாணவிகள் அண்மையில் இப் பிரச்சினையை யொட்டி வேலை நிறுத்தம் செய்திருந்தனர். இப்பொழுது அப் பாடசாலை மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் தமிழரசுத் தந்தை மூலமாக ஆட்சியாளருக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பியுள்ளார்கள்.

அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"1938ம் ஆண்டு லுணுக்கலையிலுள்ள இராமக்கிருஷ்ண சங்கத் தமிழ் கலவன் பாடசாலை, உயர் திரு. வெ. கி. நாகலிங்கம் அவர்களால் நிறுவப்பட்டது. 1962ம் ஆண்டு வரை இப் பாடசாலை இராமக்கிருஷ்ண சங்கத்தின் பேற்பார்வையில் ஒரு தனித் தமிழ்ப் பாடசாலையாக இயங்கி வந்தது. 1962ல் அரசாங்கம் தன்னுடைமையாக்கிய பொழுதிலும் 1963ம் ஆண்டு மே 3ம் திகதிவரை ஒரு தனித் தமிழ்ப் பாடசாலையாகவே இயங்கி வந்தது. 1963ம் ஆண்டு மே மாதம் பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராக ஒரு சிங்கள ஆசிரியை நியமிக்கப்பட்டிருப்பதை யிட்டு, பெற்றோர்களாகிய நாம் அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதென்னவெனில் இப் பாடசாலைக்கு இப்பொழுது நியமிக்கப்பட்ட சிங்கள ஆசிரியையை நீக்கிவிட்டு, 1963ம் ஆண்டு மே 15ம் திகதி வரை இப் பாடசாலை ஒரு தனித் தமிழ்ப் பாடசாலையாக இருந்து வந்தது போல, தொடர்ந்து அவ்வாறியங்கி வர வகை செய்து தர வேண்டும் என்பதாகும்."

## நல்லதங்காள் சரித்திர விழா

கொஸ்லந்தை மாவட்டம் மீரியவத்தை தோட்டத்தில் [13-7-63] சனிக்கிழமை இரவு 'நல்ல தங்காள்' சரித்திரம் முடிவு விழா மிக விமரிசையாக நடைபெற்றது. பல மாவட்டங்களில் இருந்தும், மலைநாட்டுப் பகுதியிலிருந்தும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் வந்து சிறப்பித்தனர்.




## பாடுபட்டு உழைத்த பாட்டாளிக்கு பயன் எதுவும் கிடைக்கவில்லை

### தொழிலாளர் கழகம்நாடுவோம்: உரிமைக்காகப் போராடுவோம்

—லபுக்கெல்லை - செந்தமிழ்ச் செல்வன்—

ஆரோக்கியத்திற்கு, ஆடம்பரத்திற்கு, அழகுக்கு அணிகின்றனர் காலணியை. ஆனால், அதைக் கையில் எடுப்பது கௌரவக் குறைவு.

ஆம், அந்தக் காலணிக் கொப்பவே, கடலடியிலிருக்கும் முத்தைக் கரைகொண்டு சேர்த்தார் போல், மண்ணின் மடியிலே மறைந்திருக்கும் தங்கத்தை மக்களின் மத்தியிலே கொண்டுவந்து சேர்த்தார் போல், கடுவனின் இருப்பிடமாய், கட்செவியின் பிறப்பிடமாய், கடுமாவின் உறைவிடமாய், கடம்பை நிறைந்த கரை நிலமாய் இருந்த இந்நாட்டைக் கடைத்தேற்றிச் சோம்பேறிகள் வாழ்ந்த நாட்டைச் சொர்க்க பூமியாக்கிய சோர்வற்ற சோலைமிகு தமிழர்கள் இங்கு மதிக்கப்படுகிறார்கள்.

இந்த நாட்டைத் திருத்திய நல்ல தமிழர்கள் தாழ்த்தப்பட்டுவிட்டார்கள். நயவஞ்சகர்கள் அவர்களுக்கு அளித்த பட்டம் "கள்ளத்தோணி", "தோட்டக்காட்டான்", "கன்றி புரூட்". ஏற்றமிகு எழில் தமிழ் இங்கு ஏளனப்பட்டு விட்டது. எளியவரால் தூற்றப்பட்டு விட்டது.

### நாம் என்ன கோழையா?

வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றமாவது போல், நாம் இந்த நாட்டிற்கு நல்கிய நல்ல உழைப்பே நமக்குக் கூற்றமாகி விட்டது. வாழை பொறுக்கலாம்! நாம் என்ன கோழையா?

பாலாடையன்ன பட்டாடை யுடுத்த பரம்பரையில் வந்த பாவையர் படங்கைக் கட்டிக்கொண்டு பழுவம் நிறைந்த பளகப் பகுதியிலே கொழுந்து பறித்துச் செல்வம் கொழிக்க வைக்கின்றனர். ஆனால், அந்த நங்கையர் அறிவாரா நல்ல தேயிலையின் ருசியை! அவர்களுக்கு அளிப்பது கழிபட்ட தூசி.

இரத்தத்தைத் தத்தம் செய்து, சத்தான தேயிலையைச் சொத்தாகத் தந்தான் தமிழன். மூத்திப் பழுச்கு முன்னே, செத்துச் சாய்ந்தான் செடியின் அடியிலே! அவன் மாணிக்க உடம்பைக் காணிக்கையாக்கிக் கொண்ட தேயிலை செழித்து வளர்ந்து செல்வம் வழங்கியது.

ஆதவன் உதித்து அத்தமனமாகும் வரை அல்லல் பட்டு அயராது உழைக்கும் ஒரு தொழிலாளிக்கு என்ன சம்பளம்? சலவை செய்த சட்டையின் மடிப்புக் கலையாமல் அதிகாரம் பண்ணும் ஒரு அதிகாரிக்கு என்ன சம்பளம்?

### அடுத்த ஆண்டு?

"அடுத்த ஆண்டு பிறக்கு முன்னே, ஆறு மணி நேர வேலை வாங்கியே திருவேன், தொழிலாளிக்கு அதிகப்படியான சம்பளம் வாங்கியே திருவேன், அவர்களின் உரிமையை மீட்டுத் தந்துவிடுவேன்" என்று இன்னும் அடுத்த ஆண்டே வரவில்லை என்று நினைத்துக்கொண்டு, பல ஆண்டுகளாக மேடையிலே கர்ஜித்துக் கொண்டு இருக்கும் தலைவர்களை நம்பி நாம் அடையும் பலன் என்ன? அவர்களை நம்பியிருந்தால் அடுத்த ஆண்டே வராது.

### நல்லதோர் தலைமை

இழைக்கும் கொடுமையை அழிக்க, இழந்த உரிமையை மீட்க, தேன் சொட்டும் திந்தமிழைத் திக்கெட்டும் பரப்ப நல்லதோர் தலைமையாய்த் தமிழரசுக் கட்சி அமைத்துள்ள இலங்கைத் தொழிலாளர் கழகத்தை நாடுவோம். ஒன்றாகக் கூடுவோம். உரிமைக்காகப் போராடுவோம். வெற்றி நமதே!

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

சுதந்திரன் அச்சகம்,
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

தந்தி: சுதந்திரன் போன்: 3411

# அரியணை உரைக்குத் தமிழரசுக் கட்சியின் திருத்தப் பிரேரணைகள்

## மனிதாபிமான முறையில் மலைநாட்டு மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்க

'சிறுபான்மையோர் தமது சுபிட்சத்துக்குப் பெரும்பான்மையோரின் நல்லெண்ணத்திலேயே தங்கியிருக்க வேண்டிய அவல நிலையைப் போக்கவும், அதே நேரத்தில் நாடு முழுவதும் ஒற்றுமையை ஏற்படுத்தி, நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்தவும் ஏதுவான, பிற நாடுகளான கனடா, இந்திய, யூகோஸ்லாவிய, ருஷ்ய குடியரசுகளில் வெற்றிகரமாக இயங்குவதுமான சமஷ்டி ஆட்சியே இலங்கைக்கு உகந்தது என்ற உண்மையை இவ் அரசாங்கம் உணரத் தவறியுள்ளமையையிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.'

சிறிமா அரசாங்கத்தின் அரியணைப் பிரசங்கத்தின் மீது இலங்கைத் தமிழரசுக் கட்சி கொண்டு வந்துள்ள திருத்தப் பிரேரணை ஒன்று, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் அரியணைப் பிரசங்கத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி மூன்று திருத்தப் பிரேரணைகளைப் பிரேரித்துள்ளது.

### ஒற்றையாட்சி முறை நீதியற்றது

முதலாவது பிரேரணையில், 'இலங்கை இரு வேறு மொழிகள் பேசும் இரு தேசிய இனங்களின் பூர்வீக நாடாகுமென்றும், அத்தகைய ஒரு நாட்டின் மீது ஒற்றையாட்சி முறை நீதியற்ற, அறிவுக்குப் புறம்பான முறையில் திணிக்கப்பட்டுள்ளதென்றும், இதன் காரணமாக 'இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் தமது சுபிட்சத்துக்கு எப்பொழுதும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களின் நல்லெண்ணத்தை நாடி நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கின்றனர் என்றும், பெரும்பான்மை இனத்தின் அரசியல், கலாச்சார, பொருளாதார நோக்கங்களுடன் தமிழ் பேசும் மக்களின் நோக்கங்களும் முரண்படும் பொழுது, தமிழ் பேசும் மக்கள் அல்லலுற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்றும், இஃதெல்லாம் மாட்சிமை தங்கிய அரியணைப் பிரசங்கம் கவனத்துக் கெடுக்காது விட்டுவிட்டதையிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சமஷ்டி ஆட்சியே உகந்தது

இந்த நிலைமையைப் போக்கவும், சிறுபான்மை மக்களின் அவல நிலையை நீக்கவும், அதே நேரத்தில் நாடு முழுவதும் ஒற்றுமையை ஏற்படுத்தி, நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்தவும் ஏதுவான, பிற நாடுகளான கனடா, இந்திய, யூகோஸ்லாவிய, சுவிட்சர்லாந்து ருஷ்ய குடியரசுகளில் வெற்றிகரமாக இயங்குவதுமான, சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்கு உகந்தது என்ற உண்மையை இவ் அரசாங்கம் உணர்ந்ததாக எந்த விதமான அறிகுறியும் மாட்சிமை தங்கிய அரியணைப் பிரசங்கத்தில் தென்படாததையிட்டுத் தாம் வருந்துவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது முதற் பிரேரணையில், மேலும் குறிப்பிட்டுள்ளது.

### மலைநாட்டு மக்கள் பிரச்சினை

அதன் இரண்டாவது பிரேரணையில், மாட்சிமை தங்கிய அரியணைப் பிரசங்கத்தில் (i) மொழிப் பிரச்சினைக்கு கௌரவமான, நீதியான ஓர் தீர்வு (ii) சர்வதேச குடியுரிமை, தொழிலாளர் உரிமைகள் அடிப்படையில், நாடற்றவர்கள் என்ற நிலையிலுள்ள மலைநாட்டுத் தமிழ் பேசும் தொழிலாளர்களின் மனிதாபிமான பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு (iii) ஆபத்தான முறையில் அதிகரிக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுத்தலும், குறைத்தலும் (iv) மக்களால் தாங்க முடியாத அளவுக்கு ஏறியிருக்கும் விலைவாசி உயர்வைக் கீழிறங்கச் செய்தல் (v) நடைமுறைக்கொத்த சம்பளத் திட்டமும், வயோதிபர் ஓய்வுச் சம்பளமும் (vi) அறிவியல், பொருளாதார அடிப்படையில் தேசிய அபிவிருத்தி, ஆகிய இம் முக்கிய பிரச்சினைகளுக்கு எவ்வித திட்டமும் அரசாங்கம் வெளியிடத் தவறியிருப்பதையிட்டு, இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளது.

அதன் மூன்றாவது பிரேரணையில்,

(13-ம் பக்கம் பார்க்க)

## தமிழுக்கென வாழ்ந்த தகைமையாளர்

### அமரர் கந்தையாவுக்கு நாவாய் இயக்குனர் கழகம் அஞ்சலி

பாடையிலே படுத்தூரைச் சுற்றும் பொழுதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும் என்று கூறிய செந்தமிழ் வீரன், நல்ல தமிழ்த் தொண்டன், தமக்கென வாழாது தமிழுக்கென வாழ்ந்த பெருந்தகை, விடுதலை வேட்கை கொண்ட வீரன், அரும்பணி புரிந்த உத்தமர், தங்களது குடும்பத் தலைவர், நமது பேரன்புக்குரிய உயர் திரு. கந்தையா அவர்களின் மறைவு குறித்து நமது கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

திரு. கந்தையாவின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்துக்கு அனுப்பிய அனுதாபச் செய்தியில் துறைமுக நாவாய் இயக்குனர் கழகச் செயலாளர் திரு. செ. ஜோர்ஜ்பிரிட்டோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

குன்றாத அறிவும் குறையாத பக்தியும் கொண்ட இவர் மண்ணிலிருந்து மறைந்தாலும் எங்கள் மனதிலிருந்து மறையமாட்டார். வாழ்நாளில் அன்னார் போல் எமக்கொரு தலைவர் இனிக் கிடைப்பாரோ.

அன்பின் பிரிவாற்றாது துயருறும் தங்கள் அனைவருக்கும் 'துறைமுக நாவாய் இயக்குனர் கழகம்' நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

'துறைமுக நாவாய் இயக்குனர் கழக'ப்பணிமனையில் நடைபெற்ற ஆட்சிக் குழுக் கூட்டத்தில் இரண்டு நிமிட மௌனம் அனுட்டித்து அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கப்பட்டது.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## மக்கள் குரல்

# சமயப் பிளவு வேண்டாம்!

### (1)

வயது ஏற ஏற, காலம் போகப்போக, பொழுது போக்குச் சாதனங்கள் குறைவாக உள்ளவர்கள் சமயத் தொண்டைப் பொழுது போக்குக்காக ஏற்றுக் கொள்வது யாவரும் அறிந்த உண்மை. ஆனுல் இவர்கள் தாம் செய்யும் செயல்களால் ஏற்படும், அடையப்போகும் பலாபலன்களைச் சிறிது சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென்பதே என்னுடைய அவா! சைவ சமயத்தின் வளர்ச்சியை நானும் நல் நோக்கோடு வரவேற்கின்றேன். ஆனுல், ஒரு சமயத்தின் வளர்ச்சி இன்னொரு சமயத்தின் வீழ்ச்சியில் உதயமாக வேண்டும் என்பதைத்தான் நான் எதிர்க்கின்றேன். எந்த ஒரு காரியத்தை எடுத்தாலும் அதில் நன்மையும் உண்டு, தீமையுமுண்டு. தீமையை நீக்குவது சாலச் சிறந்தது. கிறிஸ்தவ சமயத்தவர்களால் நாமடைந்த பயனை மறந்து ஒரு சிலர் ஏதோ சொந்த நலன் கருதிச் செய்த சிறு தவறுதலுக்காக நாம் அச்சமயத்தவரை வெறுப்பது எப்படியான அறிவீனமென்று எண்ணிப் பார்க்க வேண்டும்!

அவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பத்தான் இப்படியான நற்செயல்களைச் செய்தார்கள் என்ருல், நாமும் ஏன் எமது சமயத்தை வளர்ப்பதற்கு அவர்களைப் போன்று நற் செயல்களைச் செய்து நமது சமயத்தையும் நம்மையும் காப்பாற்றியிருக்கக் கூடாது? வளர்த்திருக்கக்கூடாது?

இன்றைய நிலையில் இலங்கையில் தமிழர்களின் பெரும் அவல நிலையை உத்தேசித்தாயினும் நமது சமயத்தவர்கள், அரசியலில் நிற்க அருகதையற்று அகழ்ந்து எறியப்பட்டவர்கள், அமைதியாகவிருந்து நமது தமிழினத்திற்குள் சமயரீதியில் பிளவை உண்டுபண்ணுமல் இருக்க வேண்டும் என்று பணிவன்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

க. ஜெயபாலினு திக்கம்

### (2)

மற்றைய இனத்தைப் பார்க்கிலும் நம் இனத்தின் மத்தியில் சாதிப் பூசல்கள், சண்டைகள், வேற்றுமைகள் தலைவிரித்தாடுவது அதிகம் என்று கூறுவது மிகையாகாது. இந்த இழிநிலையான சாதிப் பூசல்களை ஒழிப்பதற்கு சேர் கந்தையா வைத்தியநாதன் எப்பொழுதாகிலும் முயற்சி எடுத்தாரா, முன்னுக்கு வந்தாரா என்று அறிய ஆவல் உள்ளவர்களாக இருக்கிருேம்.

சைவ சமயத்தைக் கீழ் நிலைப் படுத்தும் இந்த சாதிப் பூசல்களை ஒழிப்பதில் கவனம் செலுத்துவதிலும், கிறிஸ்தவர்கள் மீது கவனம் செலுத்தினுல் அதிகம் பலன் கிடைக்குமென்று எண்ணுகிருர் போலும். நமது உடலில் இருக்கும் சிரங்கை நாம் நீக்குவதற்கு முன்பாக, மற்றவர்களைப் பார்த்து சிரங்கை ஒழியுங்கள் என்று கூறுவது எவ்வளவு அறிவீனம் என்று எண்ணத் தோன்றுகிறது.

சைவம் தழைத்தோங்க வேண்டுமென்பதற்காக, இன்னும் ஒரு சமயம் அழிக்கப்படவேண்டுமென்பது அடாத செயல், முறைகேடானது, கண்டிக்கப்பட வேண்டியதும். எனவே சமயக் கண்டனக் குரல் எழுப்பும் கனவான்களே, நன்மை பயக்கக்கூடிய நற்செய்கைகளைத் தவிர்த்து, மாசுபடக்கூடிய தீய செயல்கள் செய்ய முன் வராதீர்கள்!

— ச. அம்பலவி, அல்வையூர்.

### (3)

"நான் ஒரு அரசியல் வாதியல்ல, சமய காவலன்" என்று கூறிக்கொண்டு சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் "இலங்கை, பௌத்த சிங்கள நாடு" என்ற கோஷம் எழுப்பும் திரு. மேத்தானந்தா குழுவினருடன் கூட்டுச் சேர்ந்து, நமது இனத்தின் ஒரு பகுதியினரைப் புறம்பாக்கி, சமயப் பிளவால் தமிழர்க்குள் ஒற்றுமையைக் குலைக்க வழி வகுத்து, எம்மையும் அரசியல் ரீதியில் புறங்காட்ட வழி வகுக்கும் செயலைக் கண்டிக்காமல் இருந்தால், சைவ சமயிகளாகிய நாங்கள் கடமையில் தவறியவர்களாகி விடுவோம்.

சேர் கந்தையா வைத்தியநாதனுக்கு இன்று நாம் செய்யும் நன்னயம் என்னவெனில், 'சமயம் மனிதனுக்கு அபின்' என்று கூறும் மார்க்கசிய தத்துவத்தைப் பின் பற்றும் தோழர்கள் உங்களைப் பார்த்து, "தகுந்த தலைவரைக் கண்டுகொண்டோம்", "சைவம் இனிமேல் அழியாது", "தமிழர்களை ஆட்டிப் படைக்கும் கிறிஸ்தவர்களை, கிறிதவ தலைவர்களைக் கலக்கத் தகுந்த தலைவனைக் கண்டுகொண்டோம்" என்று போற்றும் பெறு பேறு பெற்ற உங்களை, நாம் இன்னும் சமயத் தலைவராக, திருக்கேதீஸ்வரக் காப்பாளனுக வைத்திருப்பதே!

கலைப்பாலம் அமைக்க திரு. கலுகலையை அழைத்து அதனுல் தம்மையே விவேகானந்தா சபையிலிருந்து கலைக்கப் பெற்ற பெறுமையைப் பெற்ற ஒருசில விவேகாநந்தா சபை உறுப்பினர்கள் போல் உங்களையும் அந்நிலைக்குக் கொண்டு வரவில்லை. அந்நிலை ஒன்று உண்டாவதையும் நீங்கள் விரும்பமாட்டீர்கள் என்றே எண்ணுகிறேன். இன்னற்படும் நமது இனத்தின் இன்னல் நீங்கி இனிய வழி பெறும் மார்க்கத்தின் வழியில் நிற்கும் நமது மார்க்கத்தின் போக்கைக்கெடுக்காதீர்கள்.

நீங்கள் பௌத்த சமயத் தலைவர்களுடன் சேரும் கூட்டால், சில சமயம் 'கறையான் புற்றில் கருநாகம் புக' விட்ட கைங்கரியத்தைச் செய்த பெரும் படுபாவத்தையும் நீங்கள் ஏற்க நேரிடும். 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது' என்று அறிய முடியாத நிலையில், நாம், தமிழர்கள் இருக்கிருேம். இதனையும் மறந்து

(13-ம் பக்கம் பார்க்க)

# நிதி விளக்கம் வேண்டிய நீதிபதி கொலை செய்யப்பட்டார்

### அரங்கம் 23

கொலைகாரக் குழுவினரின் திட்டங்கள் தலைவர்களோடு மட்டும் நிற்கவில்லை. தெருவில் போனவர்கள், வந்தவர்கள் எல்லோரையும் நோக்கிச் சுடலாயினர். 21-3-1920ல் ஓர் இளைஞனையும் அவனது காதலியையும் சுட்டுக் கொன்றனர்.

இந்தக் கொலைகள் போதாதென ஆங்கில ஆட்சியினர் எண்ணினர். அயர்நாட்டு மக்களைப் பயமுறுத்துவதானால் அதை வெற்றிகரமாகச்

இன வெறி படைத்த சிலர் தம்முள் இருக்கும் இன வெறியை மூடி மறைப்பதற்காக சோசலிஸம் பேசுவார்கள். அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களல்ல தொழிற் கட்சி உறுப்பினர்கள். அதனால்தான் அவர்கள் அயர் இனத்தின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டார்கள்.

நாட்டிலோ, அயர் மன்றத்தின் தலைமையில் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்

னர். கொரில்லாப் போர் புரிபவர்களுக்குப் பொது மக்களின் ஆதரவு இருக்க வேண்டியது அவசியம். இந்த ஆதரவு அயர் தொண்டர்களுக்கு நிறைய இருந்தது. அவர்கள் சிறு சிறு கூட்டத்தினராகக் குடிசைகளில் தங்கியிருந்தார்கள். தருணம்

'கோமகன்'
'மாபல்லன்'

கிடைத்த பொழுது துரோகிகளைச் சுட்டுக் கொன்றனர்; இராணுவப் பாசறைகளையும் பொலிஸ் படை வீடுகளையும் தாக்கி அவற்றிற்கு நெருப்பு வைத்தனர். அதன் காரணமாக சிற்றூர்களிலும் சிறு பட்டணங்களிலும் 315 பாசறைகளும் படை விடுகளும் நிர்மூலமாகின.

இடைஞ்சல் இன்றி வண்டில்கள் போகக் கூடியதாகவும், இராணுவ லொறிகள் தடைபட்டு நிற்கக் கூடியதாகவும் தொண்டர் விதிகளில் கிடங்குகள் அகழ்ந்தனர்; இராணுவத்தினர் பாவிக்கும் பாலங்களைச் சிதறடித்தனர்; இருப்புப் பாதைகளைப் பாழ் செய்தனர்; தொலைபேசிக் கம்பிகளை

ஆட்சியினர் அதைச் சமாளிப்பதற்காக ஆயத்தங்களைச் செய்திருந்தனர். எனினும் சனிக்கிழமை இரவே தொண்டர்கள் அயர்நாட்டிலுள்ள வருமான வரி அலுவலகங்கள் பலவற்றிற்கு நெருப்புவைத்தனர். ஆவணங்களும் பத்திரங்களும் புத்தகங்களும் சாம்பலாயின. பெல்பஸ்ற்றிலிருந்த சுங்கப் பணிமனை கூடத் தொண்டர்களிட

அயர் நாட்டில் ஆங்கில இராணுவத்தினரும் கறுப்பர்—துவரரும் கொடுங்கோல் ஆட்சியை நடாத்துவதைப் பொறுக்க முடியாத அயர் போக்குவரத்துத் தொழிலாளர்கள் மே மாதத்தில் ஒரு பெரும் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். இந்த வேலை நிறுத்தம் ஆண்டின் இறுதிவரை நடைபெற்றது. அதுவரை அனுதாபிகளிடமிருந்து சேமித்த 1,16,000 பவுண் பணத்தில் இந்த வேலை நிறுத்தக்காரர்களின் குடும்பங்கள் சீவித்தன.

## கொலைக் குழுவினர் கொடூரச் செயலுக்கு காதலர் பலி

செய்யக்கூடியவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆங்கில வெறியர்களே. அது மட்டுமல்லாது உலக மகா யுத்தத்தில் ஈடுபட்டுத் தப்பி வந்த பட்டாளத்தினர் — மிருக இச்சைகளைப் பூர்த்திசெய்ய விரும்பும் பட்டாளத்தினரே இந்தப் பணிக்கு உகந்தவர்கள் என ஆட்சியினர் எண்ணினர். காக்கி நிற மேலங்கியும் கறுப்பு நிறக் காற்சட்டையும் தொப்பியும் அணிந்து 25-3-1920ல் அயர் நாட்டில் வந்திறங்கிய இந்த மிருக வர்க்கத்தினரை அயர் மக்கள் கறுப்பர்—துவரர் (பிளக்—அண்ட்—தான்ஸ்) என்று அழைக்கலாயினர்.

கறுப்பர்—துவரரின் வருகையை அடுத்து, பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பிரிவினை மசோதாவின் இரண்டாம் வாசிப்பு இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து விவாதம்நடைபெற்றது. அமெரிக்கக் குடியதிபதித் தேர்தல் முடியும் வரை விவாதம் நடைபெற வேண்டும் என்று ஆட்சியினர் முடிவு செய்தனர். அதன்படி விவாதமும் ஒரு குறிக்கோளின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பாராளுமன்றத்தில் பிரிவினை மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 29-3-1920ல் கொலைகாரக் குழுவினர் இன்னும் ஒரு சின் பீன் பிரமுகரை அவரது வீட்டில் வைத்தே சுட்டுத் தள்ளினர். அடுத்த நாளும் ஒரு பிரமுகரை அவரது படுக்கையிலேயே சுட்டுக் கொன்றனர். கொலையென்பது கொலைகாரப் பொலீஸாருக்குத் தண்ணீர் பட்ட பாடமாகியிருந்தது. அதைப் புதிதாக வந்த கறுப்பர்—துவரருக்கும் அவர்கள் போதித்துக் கொடுத்தனர்.

தது; ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சி குடைசாய்ந்து போய்க் கொண்டிருந்தது. அயர் மன்றத்தால் நியமிக்கப்பட்ட நீதி மன்றங்கள் மிகவும் செவ்வனே பணி புரிந்தன. மக்கள் அனைவரும் நீதி பெறுவதற்காக அந்த நீதி மன்றங்களுக்கே சென்றார்கள்; வழக்குரைஞர்

## நாடெங்கும் கொரில்லாப் போர் பாசறைகள்

மிருந்து தப்பவில்லை. இதன் காரணமாக ஆங்கில ஆட்சியினர் மக்களிடமிருந்து வருமான வரி வசூலிப்பது முடியாததாகி விட்டது.

### அரங்கம் 24

மௌன்ற்ஜோய் சிறைச்சாலையிலிருந்த 75 அயர் கைதிகள் தம்மை அரசியல் கைதிகளாகக் கணிக்கும்படி

இந்த மாபெரும் வேலை நிறுத்தக் காலத்தில் இராணுவத்தினரும் பொலீஸாரும் நாடெங்கும் பெரும் அட்டூழியங்களைச் செய்தனர். தெருவில் சென்ற மக்களைத் துப்பாக்கிகளால் சுட்டும் துப்பாக்கிச் சனியன்களால் குத்தியும் கொடுமைப்படுத்தினர்; வீடுகளுக்குப் பெற்றோல் ஊற்றி நெருப்புவைத்தனர்; கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடித்தனர். இவற்றையெல்லாம் கண்ட நூற்றுக்கணக்கான பொலீஸ்காரர்களும் நீதவான்களும் இன உணர்வினால் உந்தப்பட்டுத் தமது பதவிகளைத் துறந்தனர். பதவிகளைத் துறந்த இவர்களுக்கு அயர் குடியரசின் தொழில் அமைச்சர் மாக்கீவிக்ஸ் சீமாட்டி வேலை வசதிகளைச் செய்து கொடுத்தார்.

## இன உணர்வினால் உந்தப்பட்டோர் தமது பதவிகளைத் துறந்தனர்

தொழிலை நடாத்தினர். ஆங்கில ஆட்சியினரின் நீதி மன்றங்கள் பார்ப்பாரின்றி, தேடுவாரின்றிக் கிடந்தன!

இவற்றையெல்லாம்கண்டு விரக்தியுற்ற ஆட்சியினர், அயர் மன்றத்தின் நிதியைப் பறிமுதல் செய்யும் நோக்கத்துடன், டப்ளினிலுள்ள களும் அங்குதான் தமது

அறுத்து இராணுவ நிலையங்களுக்கிடையில் உள்ள தொடர்பை அகற்றினர்.

தொண்டர்களுக்கிடையில் தொடர்பு ஏற்படுத்தும் பணியைப் பெண்கள் கழகத்தைச் சேர்ந்த மங்கையர் செய்தனர், இந்த மங்கையரே காயமடைந்த தொண்டர்களுக்குச் சிகிச்சையும்

கோரி 5-4-1920ல் உண்ணாவிரதம் ஆரம்பித்தனர். எந்த விதமான வற்புறுத்தலும் அவர்களது உண்ணாவிரதத்தை நிறுத்த முடியவில்லை. கைதிகளின் வேண்டுகோள் நிராகரிக்கப்படுவதை அறிந்த அயர்நாட்டுத் தொழிற் கட்சியும் அயர் தொழிற் சங்கங்களின்

நாட்டிலுள்ள குழப்பமான நிலையைப் பயன் படுத்திச் சிலர் கொள்ளையடிக்கவும் மற்றும் கொடுமைகளை இழைக்க முற்படுவதும் இயல்புதானே. இவற்றைத் தடுக்கும் நோக்கத்துடன் அயர் மன்றம் ஒரு பொலீஸ் படையை உருவாக்கியது. இந்தப் படையில் கடமையாற்றியவர்களும் குடியரசு இராணுவத்தில் கடமையாற்றியவர்களைப் போல் ஊதியமில்லாமலே தமது பணிகளைப் புரிந்தனர். இந்தப் பொலீசாரே அயர் மன்றத்தின் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புக்களை அமுல் நடத்துபவர்கள். சிறைத் தண்டனை அளிக்கப் பெற்றவர்களைக் கொண்டு செல்வதற்காகச் சிறைச்சாலைகள் இருக்கவில்லை. சிறைச்சாலைகள் அனைத்தையும் ஆங்கில ஆட்சியினரே பரிபாலித்து வந்தனர். அதனால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை இந்தப் பொலீஸார் சிறு தீவுகளுக்கு




வங்கி முகாமையாளர்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பணம் எவ்வாறு கிடைத்தது என்று விளக்க வேண்டும் என்று ஒரு கட்டளை விடுத்தனர். இந்தக் கட்டளையில் கையொப்பமிட்டவர் அலன் பெல் என்னும் நீதவான். ஒரு நாட்காலை அவர் ஒரு திராம் வண்டியில்

அளித்தனர். சில நேரங்களில் இந்த மங்கையரின் வாழ்க்கை தொண்டர்களின் வாழ்க்கையிலும் பார்க்க மிகவும் அபாயகரமாக இருந்தது. கறுப்பர்—துவரர்களிடமிருந்து அவர்கள் தமது கற்பைப் பாதுகாக்கவும் வேண்டியிருந்தது. நாட்டின் விடுதலையில் ஈடுபட்டிருந்த தொண்டர்களோ— அயர் குடியரசு இராணுவத்தினரோ சாதாரண இராணுவத்தினரைப் போல் மது வெறியில் தள்ளாடவுமில்லை; தம் காதலியர் தவிர்ந்த வேறெந்தப் பெண்ணையும் கனவில்கூட நினைக்கவில்லை.

இந்தத்தொண்டர்கள் ஈஸ்ரர் ஞாயிறன 4-4-1920ல் இன்னுமொரு புரட்சியை நடத்தலாம் என்று பயந்த

மாசபையும் 12-4-1920ல் ஒரு பொது வேலை நிறுத்தத்தைத் தொடங்கின. இந்த வேலை நிறுத்தம் காரணமாக, உண்ணாவிரதம் இருந்த கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியது. விடுதலை பெற்ற கைதிகளை வரவேற்பதற்காகக் களியாட்டத்

## மிருகவெறி கொண்டோரின் மிலேச்சத்தனம்

அயர்நாட்டில் உள்ள நிலைமையை ஆராய்வதற்காக பிரித்தானிய தொழிற் கட்சி ஒரு பேராளர் குழுவை அயர்நாட்டுக்கு அனுப்பியிருந்தது. சோசலிஸ்டுகளான அவர்கள் அயர் மக்களின் நியாயமான கோரிக்கைகளை விளங்கிக் கொள்ளக் கூடியவர்கள். அவர்கள் நாடெங்கும் திரிந்து தகவல்களைத் திரட்டினர். அவற்றின் அடிப்படையில் அவர்கள் ஒரு அறிக்கையைத் தயாரித்தனர். சில தான்தோன்றிச் சோசலிஸ்டுகள் கூறுவதைப் போல் அவர்கள் தங்களாலேயே அயர் மக்களது பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கூறவில்லை; அயர் மக்களது விடுதலையை அயர் மக்கள்தான் போராடிப் பெறவேண்டும் என்ற அடிப்படை உண்மையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். தொண்டர்கள் சிலர் திராம் வண்டியை நிற்பாட்டி அவரை வெளியே இழுத்துச் சுட்டுக் கொன்றனர். இந்த நிகழ்ச்சிக்குப் பின் பணத்தைப் பறிமுதல் செய்யும் எண்ணத்தை ஆட்சியினர் கைவிட்டனர்.

நாட்டில் வந்திறங்கிய கறுப்பர்—துவரர், முன்னரே இருந்த இராணுவத்தினருடன் சேர்ந்து நாட்டை நிர்மூலமாக்குவதில் ஈடுபடலாயினர். இதை எதிர்ப்பதற்கு ஏதுவான ஒரே வழி கொரில்லாப் போர்தான். அவ்வாறே போர் புரிவதெனத் தொண்டர்களும் முடிவு செய்த

## தூங்கிய இடத்தில் தொண்டர்கள் கொலை

தீபங்களை ஏற்றி வைத்துக் கொண்டாட்டங்கள் நடத்திய மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் மூவர் இறந்தனர்; 9 பேர் காயமடைந்தனர்.

உண்ணாவிரதம் இருந்ததினால் மௌன்ற்ஜோய் சிறைச்சாலைக் கைதிகள் விடுதலையடைந்ததைக் கண்ட மற்றும் சில சிறைச்சாலைகளிலிருந்த கைதிகள் உண்ணாவிரதத்தைக் கையாளத் தொடங்கினர். எனினும் இவர்கள் பல நாட்களுக்குப் பின்னர்தான் விடுதலையாகினர்.

எடுத்துச் செல்வது வழக்கம்.

ஒரு முறை அவ்வாறாக இருவர் பொலீஸ் தொண்டர்களால் தீவொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விடப்பட்டனர். அந்தக் குற்றவாளிகளை மீட்பதற்காக ஆர். ஐ. பொலீஸார் அத்தீவிற்கு வந்தனர். ஆனால் கைதிகள் இருவரும் தாம் அயர் மன்றத்தின் அதிகாரங்களையே மதிப்பதால் சிறைவாசம் அனுபவிக்க விரும்புவதாகக் கூறி அந்தப் பொலீஸாரைத் தீவை விட்டுத் துரத்தினர்!

அயர் மன்றத்தால் நியமிக்கப்பட்ட உயர், மாவட்ட, கோயிற்பற்று நீதிமன்றங்கள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. குடி

(15-ம் பக்கம் பார்க்க)

**அடுத்த வாரம்**

- ★ அத்தியட்ச குரு கைது
- ★ வெண் சிலுவைச் சங்கம்
- ★ தூக்கு மரத்தில் மாணவர்

## அறம் காக்கும் மங்கையரின் மறம் கொண்ட செயல்

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜூலை மாதம் 28-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


# இன ஒழிப்பு நடவடிக்கையில் ஆட்சியாளர் தீவிரம்

## தீவுப்பகுதி மக்களின் பொறுப்பு

ஊர்காவற்றுறை உபதேர்தலுக்கு இவ்வாரம் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி திரு. நவரத்தினத்துடன் மோதுகிறார் திரு. இராஜசூரியர் என்னும் ஒரு சுயேச்சை.

அமரர் கந்தையா பிரதிநிதித்துவம் தாங்கிய தொகுதி இது. தியாகப் பலிபீடத்திலே இன்னுயிர்ந்த அப்பேரறிஞரின் ஆசனத்திலே அமரக்கூடியவர், அவரது மறைவால் நாட்டுக்கும், இனத்துக்கும், மொழிக்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பை ஓரளவு ஈடுசெய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும். அதற்குத் திரு. நவரத்தினம் தகுதியானவரா, அந்தச் சுயேச்சை தகுதியானவரா என்று சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்க வேண்டியது தீவுப்பகுதி மக்களின் பொறுப்பு.

நாட்டின் முன்னேற்றம், இனத்தின் வாழ்வு, மொழியின் வளர்ச்சி, மற்றும் பல தேசிய, சர்வதேசிய விஷயங்களைப்பற்றியும், தான் பிரதிநிதித்துவம் தாங்கும் தொகுதி மக்களின் குறைபாடுகள்பற்றியும் ஒவ்வொரு உறுப்பினரும் சொற்போர் நடத்துமிடமே பாராளுமன்றம்.

எப்படியோ பாராளுமன்ற ஆசனமொன்றைப் பிடித்துவிட்டால் அதன் மூலம் பணம் திரட்டலாம், சொந்த மதிப்பு, புகழ், கௌரவம் எல்லாவற்றையும் வானளாவ உயர்த்திக்கொள்ளலாம், கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு சிராவஸ்தியில் உல்லாசமாகப் பொழுது போக்கலாம், தேவை ஏற்படின் பாராளுமன்றத்துள் ஒரு கதவால் நுழைந்து மற்றொரு கதவால் வெளியே வந்துவிடலாம், உற்றார் உறவினருக்கு வேலை தேடிக் கொடுக்கலாம் என்றெல்லாம் சிலர் கருதுகின்றனர். அவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது ஓர் உத்தியோகம். இம்மாதிரியான சுயநலமிகளுக்கெல்லாம் அவ்வப்போது சரியான பாடம் கற்பிக்க மக்கள் தவறுவதில்லை.

அல்லற்படும் மக்களின் இன்னல்களைத் தெரிந்த, சமுதாயத்தின் அவல நிலையை அறிந்த, தமிழ் மொழி, பண்பாடு, கலாச்சாரம் பற்றி உணர்வுள்ள, தொகுதி மக்களின் நலனுக்காக உழைக்கக் கூடிய ஒருவரையே தம் பிரதிநிதியாக மக்கள் தெரிவு செய்தல் வேண்டும். அவர் பாராளுமன்றத்திலே முக்கிய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து சாங்கோ பாங்கமாகத் துணிச்சலுடன் பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும். இழந்த உரிமைகளை மீட்பதில் தியாகம் செய்யவும் தயாராக இருக்க வேண்டும்.

தீவுப் பகுதி மக்கள் இவ்விஷயங்களைத் தீர்க்கமாக ஆராய வேண்டிய வேளை வந்து விட்டது.

திரு. நவரத்தினத்துடன் மோதும் சுயேச்சைக்கு திட்டவட்டமான கொள்கையோ இலட்சியமோ இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களை அவர் ஆதரிக்கவுமில்லை. அவற்றில் கலந்துகொள்ளவுமில்லை. தமிழ் மக்களுக்கு உரிமைகளே கிடையா என்று நினைத்துவிட்டார் போலும்!

இந்நாட்டிலே "கட்சி அரசியல்" வளர்ந்து விட்டது. பாராளுமன்றத்திலே கொள்கையற்ற "மூன்று தலைக் கழுதை"களுக்கு இனிமேல் இடம் கிடையாது கடந்த பொதுத் தேர்தலிலே மக்கள் சுயேச்சைகளில் பெரும்பாலோரை விரட்டி அடித்தனர். அவர்கள் பாராளுமன்றத்திலே தனி மரமாக நின்று எதுவும் சாதிக்க முடியாது– ஆட்சியாளர்களுக்கு அடிவருடி இனத்தை அடகு வைப்பதைத் தவிர.

ஊர்காவற்றுறையில் தமிழரசுக் கட்சியை எதிர்த்து நிற்கும் சுயேச்சைக்குப் பின்னால் மக்கள்-விரோதிகள் பலர் அணிவகுத்து நிற்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

தமிழ்க் காங்கிரஸ், திரு. சுந்தரலிங்கம், எட்டப்பர்கள் ஆகிய பிற்போக்குக் கும்பல்கள் இச் சுயேச்சைக்குப் பக்கபலமாம். திரு. சுந்தரலிங்கமோ தமிழரசாரை எதிர்த்து 423 வாக்குகளைப் பெற்று மூதூரில் அடிபட்டு ஓடியவர். காங்கிரஸாரோ கட்டுப்பணம் பறிபோய்விடுமோ என்ற பீதியில் தேர்தல் களத்தில் குதிக்காமலே புறமுதுகிட்டோடிய கோழைகள். எட்டப்பர்களோ சொந்த இனத்தைக் காட்டிக் கொடுப்பதில் கைதேர்ந்தவர்கள். இப்பேர்வழிகளின் ஆதரவு சுயேச்சையின் தோல்விக்கு உத்தரவாதமாகும்.

அமரர் கந்தையாவின் இடத்துக்குத் தகுதியானவர் திரு. நவரத்தினமே என்று ஒரே வார்த்தையில் அவரைப் பற்றிக் கூறிவிடலாம். திரு. நவரத்தினம் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவர், அரசியல் அனுபவம் மிகுந்தவர், உரிமைப் போராட்டங்களில் முன்னணியில் நின்றவர், திருமலை யாத்திரையை வெற்றிகரமாக நடத்தியவர், போராட்டத் திட்டங்களை வகுப்பதிலும், கட்சி அமைப்பிலும் நிகரற்று விளங்குபவர், மக்களின் கஷ்டங்களைத் தெளிவாக உணர்ந்தவர். அத்தகைய ஓர் உரிமைப் பாதுகாவலனைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யும் வாய்ப்பு தீவுப்பகுதி மக்களுக்கு இன்று கிடைத்துள்ளது.

மாபெரும் தியாகங்களைச் செய்யத் தயங்காத அஞ்சா நெஞ்சமுள்ளவரே தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க முடியும். அவர் பாராளுமன்றத்துள் சொற்போர் நடத்துவதுடன் வெளியிலும் உரிமைப் போராட்டங்களை முன்னணியில் நின்று நடத்த வேண்டும். அப் படைவீரர் வரிசையில் திரு. நவரத்தினம் இதுவரை இடம் பெறுதிருப்பது ஒரு குறை. அக்குறையை நிவர்த்தி செய்வது தீவுப்பகுதி மக்களின் கடமை.

தமிழ் பேசும் இனம் தற்போது ஒரு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. 1964ம் ஆண்டில் சிங்களம் அவர்கள் மீது மூர்த்தண்யமாகத் திணிக்கப்படவிருக்கிறது இந்த இக்கட்டான வேளையிலே தங்களின் உரிமைக்காக இறுதி மூச்சுள்ள வரை தளராது போராடும் ஒரு தளபதியையே தமிழ் பேசும் மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

அன்று மூதூர் அளித்த தீர்ப்பு ஆட்சியாளரையும், சிங்கள வகுப்புவாதிகளையும், எட்டப்பர் கூட்டத்தையும் கிடுகிடுக்கச் செய்தது. ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களும் அடுத்துவரும் உபதேர்தலில் அதே தீர்ப்பையே வழங்குவார்களென்பதில் ஐயமில்லை.

**அமரர் திரு. கந்தையா அவர்களுக்குத் தீவுப்பகுதி மக்கள் செலுத்தும் மனப்பூர்வமான அஞ்சலி அவரது அரசியல் வாரிசாகத் திரு. நவரத்தினத்தைத் தெரிவு செய்வதேயாகும்.**

## எழுது வினைஞர் பரீட்சையில் தமிழ் இளைஞர்கள் ஒதுக்கப்பட்டனர்

அமைதிக்கும் அளவுண்டு! பொறுமைக்கும் எல்லையுண்டு! பணிவுக்கும் வரம்புண்டு! இந்த எல்லையின் விளிம்பிலே இன்று இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் நிற்கிறார்கள்; அல்லது நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் இன்றைய ஆளவந்தாரால்.

தொட்டதெல்லாம் சிங்களம் என்ற கோஷம். திரும்பிய இடமெல்லாம் சிங்களம் என்ற பேச்சு.

இத்தனைக்கும் இந்நாட்டிலே வாழக்கூடிய தமிழ் பேசும்மக்கள் ஆண்டுஆண்டு காலமாக இந்நாட்டையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இருந்தும் தமிழ் பேசும் மக்களை அழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கிறது ஆட்சிபீடம்.

### பயனில்லை

ஆளவந்தார் இன்று கடைப்பிடிக்கும் கொள்கையின்படி பௌத்த சிங்களவர் அல்லாதோர் இனி வாழ முடியாது என்ற நிலை. இதற்குப் பல உதாரணங்கள், எடுத்துக்காட்டுக்கள் உண்டு. குறிப்பாகக் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பொது எழுதுவினைஞர் பரீட்சை நடைபெற்றது. இப்பொழுது அப்பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றன.

### பரீட்சை முடிவுகள்

கடந்த 14-6-63ல் வெளியான இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பொது எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் முதல் முடிவுகளில் 158 பேர் சித்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவர்களில் ஆக மொத்தம் இருவரே தமிழ் பேசும் இளைஞர்கள் ஆவர். எஞ்சியவர்கள் சிங்களவர்களேயாகும். இது பற்றி 23-6-63 சுதந்திரனிலும் ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம்.

19-7-63ல் வெளியான அரசாங்க வர்த்தமானியில் பொது எழுதுவினைஞர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது பகுதியினரின் பெயர் பட்டியல் வெளியாகியுள்ளது. இதில் 236 சிங்கள இளைஞர்கள் உள்ளனர்.

### இன ஒதுக்கல்

மொத்தம் இரண்டு வர்த்தமானியிலும் வெளியான முடிவுகளின்படி 396 இளைஞர்கள் பொது எழுதுவினைஞர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுள் 392 சிங்கள இளைஞர்களும் 4 தமிழ் பேசும் இளைஞர்களும் உள்ளனர்.

### உதவியா?

இன்று பதவியிலிருக்கும் ஆட்சியாளர் முன்னைப் பொழுதும் பதவியிலிருந்தவர்களிலும் பார்க்க முஸ்லிம்களுக்கு அதிகம் உதவுவதாக ஒரு சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறிவருகிறார்கள். இவர்கள் கண்ணுக்கு இவை எங்ஙனம் தெரியப் போகிறது?

### தகநாயக்கா கூற்று

திரு தகநாயக்கா கல்வி மந்திரியாக இருந்த பொழுது, அவரைப் பேட்டி காணச் சென்ற இரு முஸ்லிம் ஆசிரியர்களிடம் 'படித்த சிங்கள இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் வேலை வாய்ப்பின்றி அலையும் பொழுது நான் எங்ஙனம் முஸ்லிம் இளைஞர்களுக்கு வேலை கொடுப்பது' என்று தகநாயக்கா கூறினாராம்.

இதைத் தெரிந்து கொள்ளாத இன்றைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களோ ஆட்சியாளர் முஸ்லிம்களுக்கு உதவுவதாகக் கூறித் திரிகிறார்கள்.

## விபுலாநந்த விழா

கொழும்பு: ஜூலை 25

தமிழ் எழுத்தாளர் மன்ற ஆதரவில் எதிர்வரும் 28-7-63 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் விபுலாநந்த விழாவும், தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் முதல் வெளியீடான 'ஈழத்துப் பரிசுச் சிறுகதை' வெளியீட்டு விழாவும் நடைபெறும்.

மன்றத்தின் முதல் வெளியீடான 'ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் விபுலாநந்த அடிகளாருக்கே காணிக்கையாக்கப்பட்டுள்ளது. இந் நூலின் அறிமுக விழாவும் அன்றைய தினம் இடம் பெறும். நூலின் வெளியீட்டுரையைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் வழங்குவார். மதிப்புரையை அகில இலங்கை எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. தேவன் — யாழ்ப்பாணம் வழங்குவார்.

திரு. அ. பொ. நல்லரெத்தினம் அவர்களால் உருவாக்கப்பட்ட அடிகளாரின் உருவச்சிலையும் திறந்து வைக்கப்படும்.

மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் 'விண்ணுலகில் விபுலாநந்தர்' என்னும் வில்லுப் பாட்டும் இடம் பெறும்.

## மலைநாட்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எதிர்ப்புகளைச் சமாளிக்கவும், கண்டியச் சிங்கள மக்களுக்குப்பல உரிமைகளை வழங்கவும் முதன் முதலில் கண்டியப் பகுதியிலேயே கச்சேரி முறைகளை ஒழித்துவிட்டு மாவட்ட சபைகளை உருவாக்கலாமென்று தெரிகிறது.

இப் பொழுதுள்ள கச்சேரிகளைக் கொண்டு தோட்டப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவது சுலபமில்லை என்று கூறப்படுகிறது. ஆகவேதான் கண்டியப் பகுதிகளில் முதன் முதலில் மாவட்ட சபைகளை அமைத்து, சிங்களக் குடியேற்றத்தையும் செய்து முடித்துவிடுவதென அரசாங்கம் கருதுகிறதாம்.

கண்டியப் பிரதேசத்தில் மாவட்ட சபைகளை நிறுவுவது சம்பந்தமாக கண்டிய விவசாயக் கமிஷன் உறுப்பினர்களுடனும் அரசாங்கம் கலந்தாலோசித்துள்ளதென அறியப்படுகிறது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட சபை அமைப்பு தோட்டத் தமிழர்களுக்குப் பயன்படாதென்றும், சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தவே அது பயன்படலாமென்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## வெற்றிப் பாதையில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரெல்லாம் போட்டி போடப் போகின்றனர் என்றெல்லாம் செய்திகள் வெளியாயின. இறுதியில் யாரும் எதிர்பாராதவகையில் திரு. இராஜசூரியர் மட்டும் போட்டியிட முன்வந்துள்ளார்.

திரு. சுந்தரலிங்கமும் தம்மை எதுவிதமான போட்டியுமின்றி அனுப்பிவைக்கும்படி தமிழரசுத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டாராம். ஆனால் கட்சிச் செயற்குழு செய்த முடிவை மாற்ற முடியாது என்று தலைவர்கள் கூறிவிட்டதாக அறியப்படுகிறது.

### கட்சியின் மூளை

தமிழரசுக்கட்சி வேட்பாளரான திரு. வி. நவரெத்தினம் "கட்சியின் மூளை" என்று வர்ணிக்கப்படுபவர். 1961ம் ஆண்டு கட்சியின் பொதுச்செயலாளர்ப் பதவியினை ஏற்றுத் திறம்படச் செயலாற்றியவர்.

1956ம் ஆண்டு திருமலைத் தீர்மானத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்ட திரு. நவரெத்தினம், சரித்திரப் பிரசித்தி பெற்ற திருமலை யாத்திரைக்கு முழுப் பொறுப்பாகவும் இருந்தவர்.

1961ம் ஆண்டு ஆரம்பமான சத்தியாக்கிரகத்தில் தீவிர பங்கு கொண்டு பொறுப்புடனும் சிறப்புடனும் உழைத்துப் பெருமதிப்பைப் பெற்றுக் கொண்டவர். 1958லும், 1961லும் தலைவர்களுடன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர். ஊர்காவற்றுறையிலுள்ள கரம்பன் என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நவரெத்தினம் ஒரு பிரபலமான வழக்கறிஞரும் கூட. தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால ஊழியரான திரு. நவரெத்தினத்துக்கு மக்களின் ஆதரவு பெருகிவருவதால், திரு. வே. அ. கந்தையா அவர்கள் விட்ட பணியினைச் செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பை ஊர்காவற்றுறை மக்கள் இவருக்கே அளிப்பார்கள் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

# ஆளும் கட்சிக்குள் பிரதேசச் சண்டை

## கண்டிய முன்னணியை உருவாக்க எம்.பி.கள் முயற்சி

**ஆளும் கட்சி வாலிப முன்னணிக்குள் கண்டிய—தாழ்ந்த பிரதேச கோஷ்டிச் சண்டை வலுவடைந்து வருகிறதாம். கண்டிய எம். பிக்கள் ஐவர் சேர்ந்து 'கண்டிய முன்னணி' ஒன்றையும் உருவாக்க முயன்று வருகிருர்களாம்.**

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கண்டிச் சிங்களவர்—தாழ்ந்த பிரதேசச் சிங்களவர் என்ற பிரதேசச் சண்டை வலுவடைந்து வருகிறது என்று தெரிகிறது. அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் வாலிப முன்னணிக்குள்ளேயே பலத்த வெடிப்பு ஏற்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

வாலிப முன்னணியின் தலைவர் திரு. கலுகல்ல கண்டிக் கோஷ்டிக்கு தலைமை தாங்குகிருராம். தாழ்ந்த பிரதேசக் குழுவினரை ஆதரிப்பவர் முன்னணியின் செயலாளர் திரு. ஹேமா தாபரே. செயலாளருக்குத் தெரியாமலே வாலிப முன்னணி மாநாட்டைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை திரு. கலுகல்ல செய்து வருவதாயும் நம்பப்படுகிறது.

இந்த வாலிப முன்னணி கூடுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும்போதே கண்டிய-தாழ்ந்த பிரதேசச் சண்டை வலுவடைந்து பிளவு ஏற்பட்டு விடும் என்றும் நம்பகமாக நமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

### கண்டிய முன்னணி

இதற்கிடையில் கண்டிய எம். பிக்களில் ஐவர் அண்மையில் சிராவஸ்தியில் கூடிக் கண்டிய முன்னணியை நிறுவுவதற்கான ஆயத்தங்களைச் செய்துள்ளதாகத் தெரிகிறது. இந்த ஐந்து எம். பிக்களும் ஆளும் கட்சியாளர்களேயாவர் என்றும் தெரிய வருகிறது.

## கதிர்காம யாத்திரீகர்கள் தொண்டர் சபை

கொழும்பு கதிர்காம யாத்திரீகர்கள் தொண்டர் சபையினர் வருடா வருடம் கொழும்பு மார்க்கமாக கதிர்காம யாத்திரை செய்யும் அடியார்களுக்கு கொழும்பிலுள்ள சபை மடாலயத்திலும், மாத்தறை மடாலயத்திலும் அன்ன பானுதிகள் அளித்து தகுந்த உபசரணைகள் செய்வதற்கு ஒழுங்குகள் செய்துள்ளனர்.

கடந்த 21-7-63 ஞாயிற்றுக்கிழமை விசேட ஆராதனைகளுடன் சபைத் தலைவர் இரா. சபாநாயகம் அவர்கள் தலைமையில் கொழும்பு மடாலயக் குழுவினர் தமது பணியினை ஆரம்பித்துள்ளனர். மடாலய மண்டபத்தில் தினமும் ஆராதனை நடைபெறுவதுடன் திரு. வே. ச. சுப்பையா, திரு. மோட்சலிங்கம் ஆகியவர்களால் கந்த புராண படல பாராயணமும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இம்முறையும் போக்குவரத்து ஏற்பாடுகள் தகுந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## விவேகானந்த மண்டபத்தில் விபுலாநந்தர் விழா

சனிக்கிழமை (27-7-63) மாலை 6 மணிக்கு, விவேகாநந்த மண்டபத்தில், விபுலாநந்தர் விழாவினை விவேகானந்த சபையினர் கொண்டாடுகின்றனர். பூசை, ஆராதனை இவற்றுடன் ஆரம்பமாகும் இவ் விழாவில் திருமதி சுந்தரலட்சுமி செல்வராசாவின் வீணை இன்னிசை விருந்தும் நடைபெறும். செல்வன் நேசதுரை தியாகராஜா மிருதங்கம் வாசிப்பார்.

## சினிமாக் காட்சி பிற்போடப் பட்டுள்ளது

கலை முன்னேற்றக் கழக நிதிக்காக 28-7-63 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு வெள்ளவத்தை பிளாசா படமாளிகையில் நடைபெறவிருந்த 'திரும்பிப்பார்' படக்காட்சி அன்று பிற்பகல் 2.30 மணிக்குப்பிற் போடப்பட்டுள்ளது என்று கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## 1964-ல் பொதுத் தேர்தல்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யர்களை ஒழித்துக்கட்டும் கோஷத்துடன் தேர்தலில் வெற்றிபெற நினைப்பதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளதாம்.

ஆளும் கட்சிக்குள்ளேயே அபிப்பிராயபேதங்கள் வளர்ந்துள்ளதால், சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பிலோ, வரவு—செலவுத் திட்ட வாக்கெடுப்பிலோ அரசாங்கம் கவிழக்கூடும். இக் கண்டங்களிலிருந்து தப்பிப் பிழைத்தால் தான் அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலேயே பொதுத் தேர்தலை மேற் குறிப்பிட்டபடி வைத்துவிடலாம் என்பது தான் அந்தரங்கமான செய்தியாகவுள்ளது.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுடன் மோதிக் கொண்டிருக்கும் திரு. ஜோஜ் ராஜபக்ச, திரு. ஹியூ பெர்னுண்டோ, திரு. எம். டி. எச். சிறிசேன போன்றவர்களும், கசப்படைந்துள்ள திரு. விஜயபாகு விஜயசிங்க, திரு. ஸ்டான்லி மொல்லிகொட, திரு. லயனல் குணசேகரா, திரு. மூனவீர ஆகியோரும் மறுபடியும் சுதந்திரக் கட்சி அபேட்சகர்களாக நிறுத்தப்படப் போவதில்லை என்பது இப்பொழுது ஊர்ஜிதமாகிக் கொண்டிருக்கிறது.

1964ல் இருந்து சிங்களம் மட்டும் சட்டத்தை நூற்றுக்கு நூறு வீதம் அமுலாக்கியே தீர வேண்டுமென்று திரு. எல். எச். மேத்தானந்தா, திரு. நிசங்கா விஜயரத்ன (சத்தியாக்கிரக கால யாழ்ப்பாண அரசாங்க அதிபர்) ஞானசீக தேரோ ஆகியோர் கேட்டுக் கொண்டிருக்கிருர்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்துடன் பலப் பரீட்சை நடத்தவும் தயாராகவிருப்பதாக, அவர்கள் ஆட்டம் காணும் ஆட்சி பீடத்துக்கு அறிவித்திருக்கிருர்கள்.

## நிழல்கள்

நிழல்கள் தொடர் கதை இடமின்மையால் இவ் வாரம் வெளிவரவில்லை. அடுத்த வாரம் முதல் தொடர்ந்து வெளிவரும்.

ஆ—ர்.

## இன ஒற்றுமை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. அப்படி ஏதாவது நடவடிக்கைகள் இருக்குமாளுல், அவை சம்பந்தமாக ஆராய ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட வேண்டுமென நாம் கோருகிருேம். இப்பொழுது நடைபெற்று வரும் துர்ப் பிரசாரத்துக்கு, அச்சபை ஓர் முற்றுப்புள்ளி வைக்கட்டும். இக்குற்றச்சாட்டுகளில் ஏதாவது உண்மை இருக்கின்றதா என்பது அப்போது வெளியாகும்.

சமயம் என்ற பெயரின் கீழ் நடாத்தப்பெறும் பொறுப்பற்ற பேச்சு எல்லாவற்றையும் நாம் அறவே நீக்கிவிட வேண்டும்."

## இந்தியாவுக்குச் சென்று படிப்பைத் தொடர முடியாது

### பரிதவிக்கும் மாணவர்களுக்கு.......

இந்தியாவில் பல கல்லூரிகளில் மேல்படிப்புக்காகச் சென்று, விடுதலையைக்கழிக்க வீடுதிரும்பிய மாணவர்கள் பலருக்கு மீண்டும் இந்தியா சென்று கல்வியைத் தொடர முடியாதபடி குடியேற்றவெளியேற்ற இலாகா முட்டுக்கட்டை போட்டிருப்பதாக அறிகிருேம்.

இலங்கையிலிருந்து பணத்தை எதிர்பாராமலே பல மாணவர்கள் தமிழகத்திலும், வேறு பல இந்தியக் கலாசாலைகளிலும் கல்வி கற்று வருகின்றனர். அவர்களுக்குத் தானும் விடுமுறைப் பயணச் சீட்டுக்கள் வழங்கக்கூட அரசாங்கம் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.


அநீதமான குடியேற்ற வெளியேற்றச் சட்டங்களின் கெடுபிடிகளிளுல் கல்வியைத் தொடர முடியாது தவிக்கும் மாணவ மாணவிகள், தங்கள் முழு விபரங்களையும் எமக்குத் தெரியப்படுத்தும்படி கோருகிருேம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் சுதந்திரன் ஆசிரியருக்கு தாங்கள் படித்த கல்லூரி, படித்த வகுப்பு, மீண்டும் இந்தியா செல்ல முடியாததற்காக அரசாங்கம் காட்டும் காரணங்கள் ஆகிய விபரங்களைச் சேகரித்து ஆசிரியர், சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு-12 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்ருேம்:

—ஆசிரியர்.

சோதனையில் சித்தி பெறவும், படித்த, பாடங்கள் மனதில் இருக்கவும் லேசான வழி உண்டு.
உடன் எழுதுங்கள்
பி.எம். திசாநாயக
கம்பளை.

அற்புதமான ஆடிவேல்விழாவினை



சிலின்கோ மாளிகையின்
ஆகாசக் கடையிலிருந்து
கண்டானந்தியுங்கள்.



அத்துடன்...
- சிவனடிபாதமலை
- ஆதவன் உதயம் - அஸ்தமனம்
- காலிபேஸ் திடலில் நடைபெறும் வாண வேடிக்கை

ஆகஸ்ட் 4-ம் திகதி
காலை 9-30 மணி முதல்
ஆகஸ்ட் 8-ம் திகதி வரை
இரவும் பகலும் பார்த்துப் பரவசமடையலாம்.

வயதுவந்தவர்கள்: ரூ. 1-00
பிள்ளைகள்: சதம் 50

துரித மின்னேணிகள் உங்களை மேலே கொண்டு செல்லும். உருண்டோடும் ஏணிகள் உங்களைக் கீழே கொண்டு வந்து விடும். ஸ்ரீ விக்கிரம இராசசிங்க அரசனை சிறை வைக்கப்பட்ட தெனக் கூறப்படும் பாசறையைப் பாருங்கள்:

69, இராணி வீதி,
கொழும்பு-1.

சிறுகதை

# ஆயிரம் ரூபாய்

—அருள். மா. இராஜேந்திரன்—

கலியாணம் செய்வதில்லை என்று பிடிவாதமாக இருந்த என்னைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் அவளைப் பார்க்க வைத்தவர் என் அப்பாதான். ஆனால் இப்பொழுது — கலியாணத்துக்கு நாள் வைத்து, ஆட்களுக்கு அழைப்பிதழ்களெல்லாம் அனுப்பியான பின் — அவரே அந்தக் கலியாணத்தைச் செய்யக்கூடாதென்று நிற்கிறார்!

காரணம் இதுதான்.

அன்னம் — அதுதான் அவளுடைய பெயர் — ஆறுமுகத்தின் மூத்த மகள். ஆறுமுகம் ஓர் ஏழை உபாத்தியாயர். அன்னத்தைவிட அவருக்கு இன்னும் இரண்டு பிள்ளைகள். அவர்களும் பெண்பிள்ளைகள்தான். மூன்று பெண்பிள்ளைகளுக்குத் தந்தையாக விருந்தும் அவர்களின் பிற்காலத் தேவைக்கென்று பொருள் ஏதும் தேடி வையாமல் கிடைத்த எல்லாவற்றையும் அவர்களின் கல்விக்கே செலவு செய்து வந்தார் அவர். கல்வியே செல்வம் என்ற கொள்கை உடையவர் அவர். ஆனபடியால் தான் அன்னம் அந்தஸ்துக்கும் மேலான அறிவும் பண்பும் உடையவளாக விளங்கினுள். பட்டமேதும் பெறவில்லை அவள். பெற முயற்சிக்கவும் இல்லை. ஆனால் பரந்த அறிவும் பகுத்தறிவும் கொண்ட மேதையாக விளங்கினுள். சங்கீதம், நாட்டியம் போன்ற கலைகளிலும் தேர்ச்சியுற்றிருந்தாள். இருந்துமென்ன? ஒருவரும் அவளை மணம் செய்து கொள்ள முன்வரவில்லை. பணமேதும் இல்லாத ஒரு பெண்ணை—அவள் எவ்வளவு அறிவுள்ளவளாக, அடக்கமுள்ளவளாக, அழகுள்ளவளாக இருந்தாலும் — கலியாணம் செய்து கொள்வதற்கு இந்த நாட்டு வாலிபர்களா முன்வந்து விடுவார்கள்?

கலியாணம் செய்து கொள்ள மறுக்கும் நான் அன்னத்தைப் போன்ற ஒரு பெண்ணைப் பார்த்தால் கலியாணத்துக்கு ஒருவேளை உடன்பட்டு விடுவேன் என்று எண்ணியோ என்னவோ அப்பா என்னை அழைத்துச் சென்றார் அவளைப் பார்க்க. அவளைப் பார்த்த அன்றே கலியாணம் செய்வதில்லை என்ற என் கொள்கை — பிடிவாதம் பறந்து விட்டது. அன்றே ஒப்புக்கொண்டு விட்டேன் அவளைக் கலியாணம் செய்து கொள்வதற்கு.

சீதன விஷயமாக அப்பா அவ்வளவு கடுமையாக நிற்கவில்லை. இருக்கிற வீடு வளவையும் போடுவதற்கு நகையும், காசாக இரண்டாயிரமும் கொடுத்தால் போதுமென்று சொல்லி விட்டார். அதன் பேரில் கலியாணத்திற்கு நாட்குறித்து அழைப்பிதழ்களும் அனுப்பப்பட்டன.

அன்னத்தைவிட இன்னும் இரண்டு வயது வந்த பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்பதையும் பாராமல் ஆறுமுகம் அவர்கள் கேட்டபடி இருக்கிற வீடுவளவை என் பேரில் எழுதிக் கொடுத்தார். அன்னத்தின் கலியாணத்தையாகிலும் முடித்துவிட வேண்டுமென்ற அவாவினுல் மற்றப் பிள்ளைகளின் காது கழுத்துகளில் இருந்த நகைகளையும் கூட்டிச் சேர்த்துக் கொடுத்தார். ஆனால் கேட்டபடி காசு மாத்திரம் அவரால் கொடுக்க முடியவில்லை. எவ்வளவோ பாடுபட்டு ஒரு ஆயிரம் ரூபாய் கொண்டு வந்து கொடுத்தார். மீதி ஆயிரமும் வந்தால்தான் கலியாணம் நடக்குமென்று அப்பா சொல்லி விட்டார். அதுவும் கலியாணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு கொடுத்துவிட வேண்டும் என்றும் சொல்லி வைத்தார். கொடுத்த ஆயிரம் ரூபாவையும் சேகரிப்பதற்கே ஆறுமுகம் அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்களோ ஆண்டவனுக்குத்தான் தெரியும். இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய் அவர் எப்படித் தேடித்தரப் போகிறார்?

எனக்கோ அப்பாவின் செய்கை பிடிக்கவில்லை. ஆனால் நான் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன். அப்பா என் விருப்பு வெறுப்புக்களை இலட்சியம் செய்யக் கூடியவர் அல்ல. அவர் தந்தை. நான் மகன். அவர் என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவர். அவர் சொல்வதை — அது பிழையோ சரியோ — நான், மகன், கேட்டு நடக்க வேண்டும். அதுதான் கடமை, நன்றி. அவருக்கு எதிராக நான் ஏதும் பேசினுல் அவர் பொறுக்க மாட்டார். இந்த உலகமும் ஏற்காது. அவர் பக்கமாகத்தான் பேசும். என்னை ஏசும்.

என்னிடம் பணமிருந்தால் ஆறுமுகம் அவர்களிடம் கொடுத்திருப்பேன், அப்பாவிடம் கொடுத்து விடுவதற்கு. ஆனால் அதற்கு என்னிடமே வழி இல்லை. என்னிடம் மிஞ்சியவற்றை அவரே அவ்வப்போது வாங்கிக் கொண்டார். உண்மையில் நான் கடன்காரனுகவே இருந்தேன்.

குறிப்பிட்ட நாளும் வந்தது. பொழுதும் போய்க் கொண்டிருந்தது. ஆறுமுகமோ வந்தபாடாயில்லை, என் மனம் திக் திக் என்று அடித்துக் கொண்டிருந்தது. அந்த ஆயிரம் ரூபாயைச் சேர்க்க முடியாமல் ஆறுமுகம் அவர்கள் வராமல் நின்று விடுவாரோ என்று ஏங்கிப் பயந்து கொண்டிருந்தேன்.

பொழுது போவதற்குள் ஆறுமுகம் அவர்கள் எப்படியோ வந்து சேர்ந்தார்கள். நல்ல வேளை, அவர் ஆயிரம் ரூபாயோடுதான் வந்திருந்தார். என் கவலை நீங்கியது கலியாணமும் நடந்தேறியது.

கலியாணச் சடங்குகளெல்லாம் முடிந்து விருந்தினர்களெல்லாம் சென்றபின் நான் அன்னத்தைக் கேட்ட முதல் கேள்வி இதுதான்.

'உன் அப்பா அந்த ஆயிரம் ரூபாவையும் எப்படி, எங்கிருந்து பெற்றார்?'

கடும் வட்டிக்கோ அல்லது கெதியில் திருப்பிக் கொடுத்து விடுவதாகச் சொல்லி யாரிடமாவது கைமாற்றுகவோ வாங்கியிருப்பார் என்பது என் ஊகம். அப்படி என்றால் கலியாண வீட்டில் எனக்குக் கிடைத்த பணத்தையெல்லாம் சேர்த்து அவர் பட்ட கடனை அடைத்துவிட வேண்டுமென்பது என் நோக்கம்.

'நான்தான் கொடுத்தேன்' என்று அன்னத்திடமிருந்து வந்தது பதில். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'நீயா கொடுத்தாய்?' உன்னிடம் எது பணம்?'

'அடுத்த வீட்டு அம்பலவாணர் கொடுத்தார்.'

'ஓஹோ, அப்படியா? எப்பொழுது திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லிவாங்கியிருக்கிறாய்?'

'திருப்பிக் கொடுக்கவேண்டியதில்லை.'

'என்ன? திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லையா? சும்மாவா கொடுத்தார் அந்த அம்பலவாணர்? அவர் தான் பெரிய லோபியாயிற்றே!''

'விலை மதிக்க முடியாத ஒரு பொருளை அவருக்கு அளித்து, அந்தப் பணத்தைப் பெற்றேன்.'

விலைமதிக்க முடியாத அந்தப் பொருள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று என் உள்ளம் துடித்தது.

'விலைமதிக்க முடியாத அந்தப் பொருள் என்ன? அவர் கொடுத்ததற்கும் மேலாகக் கொடுத்து அதைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுவோமே.'

'திருப்பி வாங்கிக்கொள்ள முடியாது அதை.'

அந்தப் பொருள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிற்று எனக்கு.

'அந்தப் பொருள்தான் என்ன?'

அவள் மௌனமாய் இருந்தாள். நான் மீண்டும் கேட்டுவிட்டு அவளுடைய வாயையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

'கற்பு' அவளிடமிருந்து வந்தது பதில்.

என் காதுகளையே நம்ப முடியாமல் 'என்ன? என்ன சொன்னுய்?' என்று கத்தினேன்.

'என் கற்பு என்றேன்' என்று ஆறுதலாக, அமைதியாகச் சொன்னுள்.

என் இரத்தம் கொதித்தெழுந்து தலைக்கேறியது. செய்வதென்னென்றறியாது 'சண்டாளி, மானங்கெட்டவளே, என்று தொண்டை கிழியு மட்டும் கத்திக் கொண்டு அவளை மயிர்ப் பிடியாய்ப் பிடித்திழுத்துக் கொண்டு போய்த் தலையைச் சுவரோடு போட்டு மோதினேன்.

'மானமாம், மானம். ஊரறியப் பறைசாற்றின கலியாணத்தை ஒரு ஆயிரம் ரூபாய்க்காக நிறுத்தி விடுவது மட்டும் மானமான செய்கையோ? அதனுல் போயிருக்கக் கூடிய மானத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான் மறைவாக என் மானத்தை விற்றேன். இனி நான் செத்தாலும் பரவாயில்லை' என்று எதுவோ சொல்லிக் கொண்டு போனுள். என் கைகள் அவளுடைய தொண்டைக்குழியைப் பிடித்து நெரித்துக் கொண்டிருந்தன. அவளுடைய குரலின் கனம் வரவரக் குறைந்து கொண்டு வந்தது. என்னுடைய தொண்டையிலிருந்து 'மானங்கெட்ட நாயே! சா, சா, செத்துப் போ' என்ற வார்த்தைகள் பயங்கரமாக வெளிவந்து கொண்டிருந்தன.

பின்னுலிருந்து யாரோ என்னைப் பிடித்திழுத்தார்கள். திரும்பிப் பார்த்தேன். கவலை தோய்ந்த முகத்தோடு என் அம்மா அங்கே நின்று கொண்டிருந்தார்கள். என் கைகள் தாமாகவே பிடியை விட்டுவிட்டன.

'என்ன மேனை?''

என்னுல் ஒன்றும் பேச முடியவில்லை. உடம்பு பதறியது. கைகள் துடித்துக் கொண்டிருந்தன. அந்தச் சண்டாளியைக் கொன்றுவிட்டால்தான் கோபம் தீரும் போல் இருந்தது. திரும்பிப் பார்த்தேன், அந்த எண்ணத்தை நிறைவேற்ற. ஆனால் அதற்குள் அவளை அங்கு காணவில்லை. என் கண்கள் அவளைத் தேடி அலைந்தன.

'என்ன மேனை அப்படிப் பார்க்கிறாய்?'

'எங்கே அந்தச்சண்டாளி?'

'ஆர் மேனை? ஏதாவது கெட்ட கனவு கண்டியா?'

அம்மாவின் அந்த வார்த்தை— கனவு என்ற சொல்— என்னைத் தெளிவுறச் செய்தது. ஆம், நான் கண்டதெல்லாம் கனவுதான். உண்மை அல்ல.

எனக்கு இப்பொழுது எல்லாம் ஞாபகம் வந்தது. நேற்று இராத்திரித்தான் அன்னத்தின் தந்தை அந்த ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டிய கடைசி நாள். வெகு நேரம் ஆகியும் அவர் வரவில்லை. ஆகவே கலியாணம் நடக்காதென்று அப்பா சொல்லி அனுப்பியிருந்தார். ஆறுமுகம் ஓடி வந்து அப்பாவின் காலில் விழுந்து பணத்தைக் கெதியில் சேர்த்துக் கொடுத்து விடுவதாகவும் கலியாணத்தை நிறுத்தி விட வேண்டாம் என்றும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அப்பா ஒன்றுக்கும் ஒத்துப் போகவில்லை. ஒரேயடியாக மறுத்துவிட்டார்.

இதுதான் என் கனவுக்குக் காரணம். ஆனால் இந்தக் கனவை மற்றக் கனவுகளைப் போல என்னுல் மறந்து விட முடியவில்லை. அந்தக் கனவு எனக்கு அறிவுபுகட்டி, ஆண்மை தந்து என்னை ஒரு புது மனிதனுக்கி விட்டது.

அம்மாவோ பயந்து துடித்துக் கொண்டிருந்தாள். நான் சொன்னேன்:


'அம்மா, அப்பா தடுத்தாலென்ன அல்லது வேறு யார் தடுத்தாலென்ன நான் அன்னத்தையே செய்து கொள்ளப் போகிறேன்.'

அப்பா அடுத்த அறையில் இருப்பதாக அம்மா சைகையால் காட்டினுர். அதே சமயம் அடுத்த அறையிலிருந்து 'உவன் என்னவாம்?' என்ற அதிகாரக் குரல் கேட்டது.

'அம்மா, நான் இங்கிருந்தால் நடக்கக்கூடாத ஏதும் நடந்து விடக் கூடும். நான் இப்பொழுதே அவர்கள் வீட்டிற்குப் போகிறேன்' என்று அப்பாவுக்கும் கேட்கும்படியாகவே சொல்லிவிட்டு விடையை எதிர்பாராமல் அங்கிருந்து புறப்பட்டு அன்னத்தின் வீட்டை நோக்கிச் சென்றேன்.

அப்பொழுது விடியும் வேளை, உலகைப் பிடித்திருந்த இருளை அகற்றிக் கொண்டு ஆதவன் கீழ்த்திசையிலிருந்து எழுந்து வந்து கொண்டிருந்தான். பட்சிஜாலங்கள் சிறகடித்துப் பறந்து ஆர்ப்பரித்து அவனை வரவேற்றன. மிருக ஜாதி, தாவர வர்க்கம், மானிட ஜென்மம் அனைத்துமே அவன் வருகையைப் பூரிப்போடு வரவேற்று மகிழ்ந்தன.

என் வரவும் அன்னத்தில் குடும்பத்தில் இப்படியான குதூகலத்தைத்தான் ஏற்படுத்தும் என்ற எண்ணம் என் மனதில் எழுந்து பெருமை தந்து கொண்டிருந்தது.


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.

# இன ஒழிப்பு இயக்கத்தின் அரியணை உரைக்கு

# துரோகத்தின் தலைமகனார் துதி

## பச்சைத் துரோகத்துக்குப் பத்திரிகைகள் சூடு

## மணி மகுடங்கள் சாய்ந்த கதை தலைப்பாகை அறியுமா?

செங்கோன்

ஆனைப்பட்ட செனட்டர் பெருமான் சு. நடேசபிள்ளை தனது அதி அற்புத பச்சோந்தித் தனத்தையும் — பச்சைத் துரோகத்தையும் — பாரெல்லாம் அறிய வேண்டுமென்ற பெருமனதோடு — பாராளுமன்ற மேலவையில் அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியுள்ளார். ஆளுங்கட்சி தமிழ் பேசும் இனத்துக்கு அடுத்தடுத்துச் செய்து வந்த அட்டூழியங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒரேயடியாகத் தமிழ் பேசும் இனத்தை அழித்துவிட வேண்டுமெனக் கங்கணம் கட்டி நிற்கிறது. அத்தகு இன ஒழிப்பு நடவடிக்கையை இந்தப் பாராளுமன்றக் கூட்டத்தொடர் கால எல்லைக்குள் செய்துவிட வேண்டும் என்ற வகுப்பு வெறி தலையோங்கித் தாண்டவமாடுவதை எடுத்துக் காட்டுகிறது — புதிய அரியணை உரை. ஆனாலும் உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவித்தான் அரசாங்கம் தனது அக்கிரமத்தை மறைக்க வேண்டும். ஏகாதிபத்திய அரசுகள் அனைத்தும் இவ்விதப் பொய்யுரைகளைப் பரப்பியே தங்கள் அக்கிரமங்களை மறைத்தன. சிங்கள ஏகாதிபத்திய அரசும் இதே முறையைக் கையாண்டு வெற்றி காணக் குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள் எங்கேனும் உண்டா — என்று தேடிய வேளை "இதோ நான் இருக்கிறேன்" என்று கூறிக்கொண்டு சு. நடேசபிள்ளை அரசாங்கத்தை நாடினார். அரசாங்கம் தட்டிக் கொடுத்தது;

### அரசியல் துறவறம்

அரசியல் துறவறம் பூண்டுவிட்டதாக அறிவித்த சு. நடேசபிள்ளை திடீரென அலரிமாளிகைக்குப் பின் கதவால் சென்று செனெட்டர் பதவி பெற்றுக் கொண்டார் என அறிவிக்கப்பட்டது. "குமாரசாமிக்கு மட்டும் தான் அடுப்படி ஞானம் தெரியுமோ? இதோ பார் நான் எத்தகைய சூரப்புலி!" என்ற தோரணையில் அடுப்படி உரிமைகள் பற்றி அலரி மாளிகை அடுப்படியில் கதைகள் அளப்பதாக அறிவித்தார். மானங்காக்கும் மறவர் நாடாம் கிழக்கிலங்கையில் தப்பித் தவறித் தோன்றிவிட்ட விபீடணர்களும் இவருடன் சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### 'பேப்பே' கதையாகிவிட்டது

"தமிழரசுக்காரர்களினால் எதுவும் முடியாது. செல்லாக் காசான நாங்களே செந்தமிழை வாழவைப்போம்!" என்ற தோரணையில் பேசினார்கள். பத்திரிகைகளும் பிரமாதப்படுத்தின. அரியணை உரையில் 'அடுப்படி' உரிமைபற்றிக் கூறப்படும். மொழிப் பிரச்சினைக்கு முடிவு காணப்படும்! மாவட்ட சபைகள் அமைக்கப்படும்! என்றெல்லாம் செய்திகள் வந்தன. கடைசியில் உனக்கும் 'பேப்பே' உன் அப்பனுக்கும் 'பேப்பே' என்ற கதையாகி விட்டது.

### "ஏனையா நன்றி?"

"விழுந்தாலும் மீசையில் மண்படாது! செத்தாலும் செந்தமிழைக் காட்டிக் கொடுப்பேன்!" என்ற தோரணையில் சு. நடேசபிள்ளை அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்க முன் வந்துள்ளார். "ஏனையா நன்றி?" என்று எதிர்த்துக் கேட்பதற்கு தமிழன் எவனுமில்லை என்பது துரோகத்தின் தலைமகனார் துணிபு!

### பயங்கர நிலை

அரியணை உரைக்கு ஏன் தமிழர்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்? ஒப்புக்காவது முன்பு சில வேளைகளில் அரியணை உரையில் சிங்களம் மட்டும் சட்டத்துடன் தமிழ் மொழி உபயோக மசோதாவும் நடைமுறைக்கு வரும் எனக்கூறப்பட்டது. இம்முறை மொழி பற்றிய குறிப்பே எதுவுமில்லை. 1964ம் ஆண்டு முதல் தனிச் சிங்கள ஆட்சி! தமிழ் அரச ஊழியரின் உத்தியோகத்துக்கும் கல்தா என்ற பயங்கர நிலை நிலவுகிறது.

### கலங்கரை விளக்கமா?

பெரிதாகப் பிரமாதப்படுத்தப்பட்ட அடுப்படி உரிமையும் இல்லை. தமிழ் பேசும் அரசாங்க ஊழியரின் ஆபத்தும் நீங்கவில்லை. ஆனாலும் மொழியையும் இனத்தையும் காப்பாற்றிக் கரை சேர்க்கத் தோன்றிய துரோகத்தின் தலைமகனுருக்கு மட்டும் அரியணை உரை ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கிறது.

### என்றுமே நம்பியதில்லை

சென்ற சில ஆண்டுகளாக பிரதேச சபை நிறுவப்படும் என்ற உறுதிமொழி அரியணை உரையில் இடம்பெற்றது. வரவு செலவுத் திட்டத்தில் அடையாள மானியம் கூட ஒதுக்கப்பட்டது. ஆனாலும் இவை நடைமுறைக்கு வரவில்லை. இந்த ஆண்டின் அரியணை உரையிலோ பிரதேச சபை உருப்பெறும் என்ற உறுதியும் இல்லை. மாவட்ட சபை நிறுவுதல் பற்றிய பரிசீலனை தான் செய்யப்படுமாம். பிரதேச சபைகள் நிறுவப்படும் என்ற உறுதியும் தந்து அடையாள மானியமும் ஒதுக்கப்பட்டும் இதுகால வரை தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்தை நம்பவுமில்லை; நன்றி செலுத்தவுமில்லை. ஆனாலும் சிதைந்த குறைமாதக் கருவிலே குழந்தையின் குளிர் முகத்தைக் காண்கிறார் துரோகத்தின் தலைமகனார்.

### துரோகத்தின் தலைமகனார்

துரோகத்தின் தலைமகனாரின் வஞ்சனையிலே தமிழ் பேசும் இனமோ — இனத்தை வழி நடத்தும் தமிழரசு இயக்கமோ ஏமாறுவிட்டாலும் — சில இளிச்சவாயர்கள் எதுவோ ஏமாந்தார்கள். இந்த ஏமாற்றத்தைப் பிரதிபலிப்பதாக விருந்தது சென்ற 18-7-63 "டைம்ஸ் ஒப் சிலோன்" பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம்.

எவ்வளவோ நம்பிக்கையூட்டும் செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பி விட்டு இப்படியா கடைசியில் அரசாங்கம் காலை வாரிவிடுவது என்ற தோரணையில் அழாக்குறையாகக் கேட்டது டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம்.

### கேலி செய்கிறது

19-7-63 டெயிலி மிரர் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் மேலும் ஒரு படி முன் சென்றது. அரியணை உரையில் மாவட்ட சபைகள் பற்றிய பதினாறு சொற்களைக் கொண்ட வசனத்திலே—மொழி பற்றி ஒரு சொல்லுக் கூட இல்லாதிருந்தும்—இந்த வசனத்திலே மொழிச் சிக்கலின் முடிவையும்—தேசிய ஒருமைப்பாட்டின் தொடக்க ஒளியையும் காணும் துரோகத்தின் தலைமகனாரின் நுண்ணிய அறிவையும், ஆராய்ச்சித் திறனையும்—நெடுநோக்கையும்—கண்டு கேலி செய்திருக்கிறது டெய்லி மிரர் தலையங்கம்.

### சரியான சூடு

21-7-63 சண்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்துள்ள கட்டுரை அரியணை உரையில் தமிழ் பேசும் மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டி துரோகத்தின் தலைமகனாருக்கும் சரியான சூடு கொடுத்திருக்கிறது.

### மொழிப் பிரச்சினையின் மூலகர்த்தா

காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்காவுக்குப் போற்றித் திருவகவல் பாடும் துரோகத்தின தலைமகனாருக்கு, மொழிப்பிரச்சினையின் மூலகர்த்தா காலஞ்சென்ற பிரதமரே என எடுத்துக் காட்டுகிறது அக்கட்டுரை. பெண் பிரதமரின் துணிவிலும் திறமையிலும் மயங்கியிருக்கும் துரோகத்தின் தலைமகனாரை மேலும் கிண்டல் பண்ணுகிறது "சண்டே டைம்ஸ்" கட்டுரை.

(13-ம் பக்கம் பார்க்க)

---

தனிவழி கண்டு

# நமது உரிமை பெறுவோம்

## தமிழ் தொழிலாளர் சம்மேளனம் உருவாகும்

### மருவிய எழுது வினைஞர் சங்க ஆரம்ப விழாவில் உரை

இன வேற்றுமை கடந்த வர்க்க ஒற்றுமை வெறும் காட்டுக் கூச்சலாகி விட்டது. தமிழ் பேசும் தொழிலாளர்களின் அதி முக்கிய பிரச்சினைகளுக்குப்போராடவோ, இல்லை அனுதாபக் கண் கொண்டு பார்க்கவோ தேசியம் என்ற போர்வையுள் கரந்தொழியும் இயக்கங்கள் தவறிவிட்டன. எனவேதான் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தங்களுக்கு என்று தனி இயக்கம் வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறார்கள். நாம் தனிவழி கண்டு உரிமை பெறுவது உறுதியாகிவிட்டது.

இவ்வாறு கடந்த வாரம் உதயமாகிய 'மருவிய எழுது வினைஞர் சங்க' ஆரம்பக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய கலாநிதி திரு. வ. கணேசலிங்கம் குறிப்பிட்டார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் அவர் கூறியதாவது:-

எங்கள் பலத்தில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற எண்ணம் பரவலாக தமிழ் ஊழியர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. இந்த நிலை உருவாவதற்கு முக்கிய காரணம் பலதுறையிலும் நம்மவர்கள் ஒடுக்கப்படுவதேயாம்.

அடுத்துப் பேசிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. சே. கோடீஸ்வரன் பி. ஏ. கூறியதாவது:- தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் தமக்கென உருவாக்கிய தொழிற் சங்க இயக்கங்களில் இன்று உதயமாகும் சங்கம் நாலாவது இடத்தைப் பெறுகிறது.

தனியார் துறையிலும் ஏனைய துறைகளிலுமாக மொழிவழித் தொழிற் சங்கங்கள் இதுவரையில் பதினாறு உருவாகியுள்ளன. இவையனைத்தும் எதிர்பார்த்ததிலும் சிறப்பாகச் செயல்படுகின்றன.

எனவே நாம் இப்பொழுது தொழிற் சங்க சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

நமது சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் சிறந்த சேவையாளர். ஆகவே சம்மேளனம் அமைக்கும் முயற்சியையும் திறம்பட செய்து முடிப்பார் அவர்.

பின்வருவோர் 'மருவிய எழுதுவினைஞர் சங்க'ப் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. ஆர். சிவசிதம்பரம், துணைத் தலைவர்கள்: திருவாளர்கள் வி. சிவானந்தன், ரி. தவராஜா, பொதுச் செயலாளர்:- திரு. கே. முருகையா, துணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் கே. இராசதுரை, கே. என். சேவியர், பொருளாளர்: திரு. எஸ். இராசரத்தினம், துணைப் பொருளாளர்: திருவாளர்கள் வி. செல்வநாயகம், கே. குமரேசு. பதினொருவர் கொண்ட ஆட்சிக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.




பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி 3597—6522



# தமிழ்ப் படத்தில் ஆங்கிலப் பாட்டு

## 'இரத்த திலகத்தில்' இடம் பெறுகிறது



### கல்யாணியின் கணவன்

சிவாஜி கணேசன், சரோஜாதேவி, ராதா, ரங்கராவ், ராமச்சந்திரன் முதலியோர் தோன்றும் 'கல்யாணியின் கணவ'னை கோவை பட்சிராஜா ஸ்டுடியோஸ் அதிபர் ஸ்ரீ ராமுலு நாயுடு சுதந்திரத் தினத்தன்று திரைக்கு அனுப்புகின்றார்.

### துளசி மாடம்

எம். ஏ. வி. பிக்சர்சார் தயாரித்து வரும் 'துளசி மாடம்' 15ம் திகதி திரைக்கு வருகிறது. புதுமுகம் ராஜன், கோபால கிருஷ்ணன், சந்திரகாந்தா, கருணாநிதி போன்றோர் இப்படத்தில் தோன்றுகின்றனர். சீனிவாசன் டைரக்ஷனில் படம் முடிவை நெருங்கி விட்டது.

### நீதிக்குப்பின் பாசம்

மூன்று மாதங்களுக்கு ஒரு புதுப் படத்தை திரைக்கு அனுப்பி வைக்கும் தேவர் பிலிம்சார் எம். ஜி. ஆர்., சரோஜாதேவி, ரங்கராவ், நம்பியார், அசோகன் முதலியோர் நடித்து வரும் 'நீதிக்குப் பின் பாசம்' படத்தை ஆகஸ்டு 15ல் திரையிடத் திட்டமிட்டுள்ளனர்.

நாஷனல் மூவிசார் தயாரித்து வரும் 'இரத்த திலகம்' படத்தில் ஷேக்ஸ்பியரின் தலைசிறந்த ஆங்கில நாடகமான 'ஒத்தலோ' இடம் பெறுகிறது. இந்நாடகத்தில் சிவாஜியும், சாவித்திரியும் சோடி சேர்ந்து நடிக்கின்றனர். நாடகம் முழுவதும் ஆங்கிலத்திலேயே இருப்பதால் இருவரும் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுகின்றனர்.

ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி, இந்திய சுதந்திர தினத்தன்று இப்படம் திரையிடப்படுவதால், இந்நாடகத்தின் படப்பிடிப்புகள் அதிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

### ஏட்டிக்குப் போட்டி

சாவித்திரியின் பிறந்த நாள் வைபவம் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. தோழிகளுடன் சேர்ந்து சாவித்திரி ஒரு ஆங்கிலப் பாடலைப் பாடுகிறார். தோழிகள் துள்ளி விளையாடி ஆனந்தத்தில் மூழ்கிறார்கள்.

அடுத்த வீட்டு மாடியில் பரீட்சைக்காகப் புத்தகங்களைக் கட்டிக் கொண்டு மாரடிக்கும் சிவாஜிக்கு இது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. 'கல்லூரியிக் குமரிகளின் கொட்டத்தை அடக்குகிறேன் பார்' என்று மார்தட்டிக் கொண்டு மாடியிலேயே யுத்த பேரிகை முழங்குகிறார். இந்த முழக்கத்தையெல்லாம் லட்சியம் செய்யாமல் அப் பெண்கள் ஆனந்தமாக ஆடிப்பாடுகின்றனர்.

பொறுமையை இழந்துவிட்ட சிவாஜி தமது கல்லூரிக் குமரர்களான சிலரை அழைக்கிறார். அவர்கள் எல்லோரும் வந்ததும், பலவிதமான வாத்தியக் கருவிகளை எடுத்து வைத்துக் கொண்டு கர்ஜனை புரிய ஆரம்பித்தனர். அடுத்த வீட்டில் நடந்த ஆனந்தக் கேளிக்கைகளுக்கு இந்தக் கர்ண கடூரமான இரைச்சல் முட்டுக்கட்டையாக விருந்தது.

இந்தக் கட்டங்கள் அண்மையில் படமாக்கப்பட்டன.

சிவாஜி சாவித்திரியுடன், கண்ணப்பா, நாகேஷ், மனோரமா முதலியோர் நடிக்கும் இப்படத்தை தாதா மிராசி டைரக்ட் செய்கிறார்.

### சுதந்திர தின விருந்து

இந்தியாவின் சுதந்திர ஞாபகார்த்த தினமான ஆகஸ்டு 15ல் வழக்கமாக புதுப்படங்கள் தமிழ் நாட்டில் திரையிடப்படுவதுண்டு. இவ்வருடமும் பல புதுப் படங்கள் திரையிடப்படுவதற்கான அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்திய-சீன யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாஷனல் மூவிசாரின் 'இரத்த திலகம்' ஆகஸ்ட் 15ல் திரைக்கு வரும்.

### 700 திரைகளில் வி. ஐ. பி.

"த வெரி இம்போட்டென்ட் பேர்சன்ஸ்" (The V. I. P.) என்ற ஆங்கிலப் படம் உலகெங்கணும் உள்ள பிரபலமான 700 திரைகளில் செப்டம்பர் மாதம் 5ம் திகதி திரையிடப்படவிருக்கிறது.

எம். ஜி. எம். ஸ்தாபனத்தார் வெளியிடும் இப்படம், இலங்கையிலும், கொழும்பு மெஜஸ்டிக் படமாளிகையில் அதே தினத்தில் திரையிடப்படவிருக்கிறது.

# இரத்தக் கையெழுத்திடும் வீரத் தியாகிகள்

'இந்திய அன்னையின் கால்களை அண்டிப் பிழைக்க வந்த அந்நியர்கள் தங்கள் ஆதிக்க ஆசையின் உந்துதல் காரணமாக அன்னைக்கு விலங்கைப் பூட்ட ஆரம்பித்தனர்.

'அடிமை விலங்கை அறுத்தெறிந்து அன்னையைச் சுதந்திரதேவியாக்க அன்று வீரத் தியாகிகள் சிந்திய இரத்தம் வீண்போகவில்லை, அந்தத் தியாக இரத்தத்தில் இந்தியன் எடுத்துக் கொண்ட உறுதி யுக யுகாந்திரத்துக்கும் அழியாது. சீனன் படையெடுத்தால் என்ன? சில்லறைகள் சீறினால் தான் என்ன? வானுயர்ந்த மாதாவின் சுதந்திரக் கொடியை இம்மியளவும் அசைய விடமாட்டோம்' என்ற கருத்துடன் வீர சபதமேற்கும் காளையர் கூட்டத்தைக் கடந்த 3ம் திகதி சென்னையைச் சேர்ந்த கோடம்பாக்க—விருகம் பாக்க எல்லையில் காண முடிந்தது.

இருபதாம் நூற்றாண்டில் இருக்கும் நாம் திடீரென 18ம் நூற்றாண்டை அடைந்துவிட்டோமா என்ற ஐயம் வருகிறது.

அன்னை மாதாவை அடிமைப் படுத்தும் நோக்குடன் வரும் அந்நியரின் கருத்தை உன்னிப்பாக அவதானித்துக்கொண்ட வீர இளைஞன் ஒருவன் தோன்றுகிறான். அந்த வீரனைப் பல முறை நாம் கண்டிருக்கிறோம். அதோ அவனைச் சூழ்ந்து வீர சபதமேற்கும் வீர வாலிபர்கள் நூற்றுக்கணக்காக நிற்கின்றனர். தினவெடுக்கும் திண்டோளினர்—தீர்க்கமாக முடிவெடுக்கும் கட்டம்.

அங்கே ஒரு வீரன் உடைவாளினை உருவித் தனது கைகளை அறுத்து இரத்தத்தை எடுத்துக் கையெழுத்திடுகிறான். அவனைத் தொடர்ந்து பல வீரர்கள் அதையே செய்கின்றனர்.

வீர உணர்ச்சி ததும்பும் இக்கட்டத்தை ஸ்ரீதர், சித்திராலயாவிற்காகத் தயாரிக்கும் 'அன்று சிந்திய இரத்தம்' படத்துக்காக எம். ஜி. ஆருக்குச் சொந்தமான சந்தியா தோட்டத்தில் கடந்த 3ம் திகதி படமாக்கினார்கள். எம். ஜி. ஆர்., நாகேஷ், முத்துராமன், கோபால கிருஷ்ணன், விஜயன் வி. மகாலிங்கம் போன்றோருடன் எம். ஜி. ஆர். மன்றங்களைச் சேர்ந்த பலரும் இந்தக் கட்டத்தில் கலந்து கொண்டனர்.



ஒய்யாரமாக வந்த ஐயாவின் கழுத்தை அமுக்குவதில் இந்த இளைஞன் என்னத்தைக் கண்டானோ தெரியவில்லை, 'கடவுளைக் கண்டேன்' படத்தில் எம். ஆர். ராதா, கல்யாணகுமார்.

## எமது விமர்சனம்

# இரக்கமுள்ளவளான அரக்கியாக மாறுவதா? அன்னை

பத்து மாதங்கள் வயிற்றிலே வளர்த்தாள் ஒருத்தி; இருபது வருடங்கள் இதயத்திலே வளர்த்தாள் ஒருத்தி. ஆக ஒரே பிள்ளை— இரண்டு தாய்கள்.

இருபது வருடங்கள் இதயத்தில் சுமந்தவளும், பத்து மாதங்கள் வயிற்றிலே சுமந்தவளும் அந்த ஒரே பிள்ளைக்காகப் பாத்தியதை கொண்டாடுகிறார்கள்.

பூக்கவும் முடியாமல் காய்க்கவும் முடியாமல் தவிக்கும் ஒரு மரம் சிறப்பாக வளர்ந்து நிற்கிறது. பூத்துக் குலுங்கிய மரம் வரண்டு வாடி வதங்குகிறது. இவை யார் செய்த குற்றம்? இந்நிலை ஏற்படக் காரணம் யாது? அன்புதான் — பாசம் தான் குற்றவாளி.

மலடியான ஒருத்தி தன் தங்கையின் மகனைத் தன் மகன்போல் பேணிக்காக்க முயலுகிறாள். உரிமை பாராட்டி, உண்மையை வெளிப்படுத்தி தன் பாசத்தை அறுத்து விடுவானோ தன் தங்கை என்ற எண்ணத்தின் காரணமாக இரக்கமே உருவானவள் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு அரக்க குணத்தை வருந்தி அழைக்கின்றாள். அதன் காரணமாகப் பல அனர்த்தங்கள் விளைகின்றன. இதை வைத்துக் கொண்டே கதையும் நகருகிறது.

நடிப்புக்கு இலக்கணம் வகிக்கும் தமிழகத்துத் திரைவானின் முன்னணித் தாரகை பானுமதி 'அன்னை'யின் மூலம் நடிப்புக் கலையின் உச்சப் படிக்கே போய்விட்டார். அவருக்கு ஈடு கொடுக்கும் வகையில் ரங்கராவ் பானுமதியின் கணவராகத் தோன்றுகின்றார்.

மென்மை உள்ளம் படைத்த பெண்கள் ஒரு சிறு அதிர்ச்சிக்குள்ளானாலும் சித்தப் பிரமை கொண்டு விடுவது இயற்கை. அந்தத் தன்மைகளை வைத்துப் பின்னப்பட்ட 'அன்னை' க்குப் பொருத்தமாக பானுமதி தோன்றுகிறார்.

சோகக் குளத்தில் நீச்சலடிக்கும் பாத்திரத்தில் பல முறை தோன்றிய சௌகார் ஜானகி இப் படத்திலும் சோகமயமாகக் காட்சி கொடுக்கிறார். இணையாக டி. எஸ். முத்தையா வருகிறார். குமாரி சரஸ்வதி, ராஜா, சந்திரபாபு போன்றோரும் தோன்றுகிறார்கள்.

நகைச்சுவை அம்சங்களுக்குக் குறைவில்லை. சந்திரபாபு, நாகேஷ் தோன்றும் 'லைலா மஜ்னு' நாடகம் குலுங்கக் குலுங்க நகைக்க வைக்கும். ஆனால் இவை வலிந்து புகுத்தப்பட்டு, கதைக்குப் பொருத்தமின்றி நகர்கின்றன.

உயர்ந்த நடிப்பு, உயிர்த் துடிப்புள்ள வசன அமைப்பு, சுதர்சனத்தின் இசை, கவிஞரின் பாடல்கள், எல்லாவற்றிற்கும் மேலாக கிருஷ்ணன்—பஞ்சு டைரக்ஷன் ஆகியவை ஒருங்கு சேர்ந்ததுதான் ஏ. வி. எம். தயாரித்த உன்னத சித்திரம் அன்னை.

—நாதன்



பானுமதியின் உள்ளத்தை அறிய முயலுகிறார் ரங்கராவ் 'அன்னை' யில்

# சமஷ்டி ஆட்சி இன்றேல் நாடு முன்னேற முடியாது

## ஜனப்பிரதிநிதிகள் சபையில் இராசமாணிக்கம், முகம்மது அலி

தமிழ் பேசும் மக்கள் ஒரு போதும் சமஷ்டி ஆட்சி முறை வேண்டுமென்ற கோரிக்கையைக் கைவிடப் போவதில்லை. வருங்காலத்தின் பேராபத்தை உணர்ந்தே தமிழர் சமஷ்டி முறை அரசாங்கத்தைக் கோரினர். இந்த ஆட்சிமுறை புதியதல்ல. பலதரப்பட்ட சமூகங்கள் வாழும் நாடுகளில் இந்தச் சமஷ்டி முறை இயங்கி வருகிறது.

இவ்வாறு, சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில், அரியணைப் பிரசங்கத்துக்குத் தமிழரசுக் கட்சியின் திருத்தப் பிரேரணையைச் சமர்ப்பிக்கையில், திரு. சி. மூ. இராசமாணிக்கம் குறிப்பிட்டார்.



திரு. சி. மூ. இராசமாணிக்கம்

அவர் மேலும் கூறியதாவது: ஒரு நாட்டில் வாழுகின்ற எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழாவிடில், அந்நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியாது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் அரசாங்கம் சிங்களவர் மயமாகியது. பெரும்பான்மை மக்கள் தங்கள் நலனுக்காகவே சட்டங்களை நிறைவேற்றினர்.

இந்த அரசாங்கத்தின் மீது தமிழ் பேசும் மக்களுக்கு இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும், இவ் அரியணை உரையுடன் மறைந்து விட்டது. சிங்களம் மட்டும் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடாத்த இவ் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், தமிழ் பேசும் மக்கள் சமஷ்டி ஆட்சி முறையினையே தொடர்ந்து கோருவர்.

### வெறும் ஏமாற்று

தமிழரசுக் கட்சியின் இரண்டாவது திருத்தப் பிரேரணையைப் பிரேரித்துத் தமிழில் பேசிய மூதூர் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஈ. எச். முகம்மது அலி பேசியதாவது:

அரசாங்கத்தின் இந்த சிம்மாசனப் பிரசங்கம் வெறும் ஏமாற்று வித்தையே. நாட்டின் அதி முக்கிய பிரச்சினையான மொழிப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் எவ்வித மார்க்கத்தையும் தனது சிம்மாசனப் பிரசங்கத்தில் காட்டவில்லை.



ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி

தமிழ் — முஸ்லிம் மக்கள் இறுதிவரை சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்தே தீருவர். இன ஒற்றுமை இன்றி நாடு ஒரு போதும் முன்னேறாது. சமஷ்டி ஆட்சி முறையே நாட்டுக்கு உகந்ததாகும்.

## இன ஒழிப்பு....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தனை ஆக்குரோசத்தோடும், வேதனையோடும் குமுறும் டைம்ஸ் பத்திரிகையோ அல்லது டெயிலி மிரர் பத்திரிகையோ தமிழரசு ஏடுகளா? இல்லை! இல்லவே இல்லை! தமிழரசுக் கட்சியை எதிர்ப்பதிலே முன்னிற்பவை. தமிழரசு நாட்டுக்குத் தீது என்பவை. தமிழரசு எதிர்ப் பிரசார ஏடுகளிலே முக்கியத்துவம் பெற்றவை. இத்தகைய ஏடுகளே இன்று ஏமாந்த இளிச்சவாயர்களாகி விட்டன. வேதனையுடன் குமுறுகின்றன. ஆனாலும் துரோகத்தின் தலைமகனார் நன்றி தெரிவிக்கப் புறப்பட்டு விட்டார்.

### புரிய வைக்கும்

எத்தனை துணிவு? தமிழ் பேசும் மக்கள் ஏமாந்த சோணகிரிகள் என்ற எண்ணமா? இல்லை சிந்திக்குந் திறன் அற்றவர்கள் என்ற எண்ணமா? தமிழ் பேசும் மக்களுக்குச் சிந்திக்கத் தெரியும். இன்னும் செயல்படத் தெரியவில்லை. செயல்படத் தொடங்கிவிட்டார்களானால் செத்தொழியும் துரோகம். மக்களின் எழுச்சி மிக்க செயலாற்றல் மணி மகுடம் தரித்த மன்னர் குடும்பங்களை வேரோடு சாய்த்த கதைகளை இந்தத் தலைப்பாகை இன்னும் அறியவில்லையென்றால் காலம் நிச்சயம் புரிய வைக்கும்.

# சிங்களத்தைப் புகுத்தும் நோக்கத்தைக் கைவிடுவீர்

## நகரசபைத் தலைவருக்கு நீர்கொழும்பு மக்கள் மகஜர்

எழுபது சத வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் நீர்கொழும்பு நகரசபையின் எல்லா அலுவல்களையும் சிங்களத்தில் நடாத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதை அறிந்த நீர்கொழும்பு பெரிய தெரு வாலிப முற்போக்குச் சங்கம் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதுபற்றி நகரசபைத் தலைவருக்கு ஒரு மகஜரும் அனுப்பியுள்ளார்கள்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: நீர்கொழும்பு உள்ளூர் ஆட்சி மன்றம் பெரும்பான்மை தமிழ் பேசும் மக்களைக் கொண்டுள்ளது. அப்படியிருக்க அதில் தனிச் சிங்களத்தைப் புகுத்துவது ஜனநாயகமாகுமா? அதில் உண்மையான சோஷலிசத்தைக் காண முடியுமா? இத்தகைய ஜனநாயகத்திற்குப் புறம்பான செயலைக் கைவிடுவது பெரும் நோக்குடன் செய்யும் செயற்கரிய செயலாகும்.

தமிழ் பேசும் மக்கள் வதியும் இந்நகரில் சிங்களத்தைப் புகுத்துவது பெரும் அநீதியாகும். தமிழ்-சிங்கள பாகுபாடு இன்றி அன்றும் இன்றும் வாழ்ந்து வருகிறோம். இந்நிலை நீடிக்க ஆவன செய்யவும்."

### எடுத்துக்காட்டாகும்

நீர்கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு உள்ள உணர்ச்சி மற்றைய பகுதி மக்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

## அரியணை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

'மாட்சிமை தங்கிய தங்கள் அரசாங்கம், இன, மத அடிப்படையில் பொதுத் துறையில் உள்ள எல்லா உத்தியோகங்களுக்குமுரிய நியமனம், தேர்வு, உத்தியோக உயர்வு ஆகியவற்றை நடாத்தி வருவதாலும், குடியேற்றத் திட்டங்களில் கூட இன, மத அடிப்படையிலேயே ஆட்களைக் குடியேற்றுவதாலும், தங்கள் ஒர வஞ்சகக் கொள்கையையே தொடர்ந்து செயற்படுத்துகிறீர்கள் என்பதையிட்டும்;

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய கைத்தொழில்களை நிறுவுதல் சம்பந்தமாகவும், அங்குள்ள தமிழ் பேசும் இளைஞர்களுக்கு நவீன கைத்தொழில் நுணுக்கங்களைக் கற்பிக்க வசதியோ, பயிற்சியோ தேசிய அடிப்படையில் தருவதையிட்டும், அம்மாகாணங்களில் கைத்தொழில் தாபனங்களையோ அல்லது மீன்பிடித் துறைமுகங்களையோ நிறுவி, தேசியத் திட்டங்களைச் செயற்படுத்தல் சம்பந்தமாகவும் தங்கள் மாட்சிமை தங்கிய அரசாங்கம் ஓரவஞ்சகமாக நடப்பதையிட்டும்;

தங்கள் ஆதரவாளர்கள் ஈடுபடும் கைலஞ்சம், ஊழல், அராஜகம், ஒழுங்கீனம் ஆகியவற்றுக்கெதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காது, மாறாக அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம், மாட்சிமை தங்கிய தங்கள் அரசாங்கம் இந் நாட்டின் பொதுச் சேவைத் துறையினதும், பொது வாழ்வினதும் அஸ்திவாரத்தையே பலவீனப் படுத்துவதையிட்டும், இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்று குறிப்பிட்டுள்ளது.

## சமயப் பிளவு..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விடாதீர்கள். காவியுடைக்குள் கைத்துப்பாக்கி இருக்கும் காலமிது!

சிங்களச் சகோதரர்கள், தமது மொழிக்காக, சமயத்திற்காக, நமது சமயத் தலைவர்களையோ, சமய குருமார்களையோ சிவலிங்கத்தில் கட்டிப் போட்டு, பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப் பின் வாங்கமாட்டார்கள். இதனை எவராலும் மறுத்துக் கூறத்தான் முடியுமா?

பொறுப்புள்ள தலைவர்களே பொறுப்பாகவும் பொறுமையாகவும் நடவுங்கள், பொறுமையை இழக்காதீர்கள். பெரிய அறிவுள்ள நீங்கள், சிறிய அறிவிச் செயல்களைச் செய்யாதீர்கள்!

—ச. அற்புதம், வெள்ளவத்தை.

## சந்தர்ப்ப....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாசாங்கு செய்வதற்கும், தமிழரைத் தூஷிப்பதே தமது கடமையாகக் கொண்ட திரு. சமரவீராவும், திருவாளர்கள்: சாம். பி. சி. பெர்னாண்டோவும், பிலிப்குணவாத்தனவும் தமிழரின் கண்ணீர் துடைக்கப் படவேண்டும் என்று இறங்கி வந்து கொண்டிருப்பதற்குக் காரணம் தமிழரசுக் கட்சியே!

இடது சாரி ஐக்கிய முன்னணியினரின் இடர் நிறைந்த கொள்கை பலரை இன்னலில் சிக்க வைத்துள்ளது. திரு. பண்டாரநாயக்காவின் கூட்டுச் சாம்பார் அரசாங்கம் எவ்வாறு சிதறியதோ அதே நிலையில்தான் இந்த இடது சாரி ஐக்கிய முன்னணியும் சிதையும் என்பது வெள்ளிடைமலை.

### இறுதி வரை போராடும்

இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுத்து மலையக மக்களின் கண்ணீரைத் துடைப்பதே தமிழரசுக் கட்சியின் உயிர்ப் பிரச்சினை. இதிலிருந்து அது எள்ளளவும் பிறழாது என்பதற்குக் கடந்தகால தமிழரசுக் கட்சியின் சரித்திரமே சான்று. உரிமைகள் வழங்கப்படினும் அதனைப் பேணிப் பாதுகாக்க அரசியல் சட்டத்தைத் திருத்தி ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவ தமிழரசுக் கட்சி இறுதிவரை போராடும்.


கண்ணிற்கழகூட்டும்; கவர்ச்சிமிகு பாவனைக்கு;

எல்லோரும் விரும்புவது;

லதா!!!






லதா அச்சடி கிளேஸ்ட் கொட்டன்!!

கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாட்டுடனும் உருவானது.

லதா பொப்லின்!!

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.

எலைட் சுப்பர்லோன்

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:- குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனைப் பகுதி 26, கெய்ஸர் வீதி,
கொழும்பு.
சில்லறை விற்பனைப் பகுதி 110 &114, மெயின் வீதி

—MYLAD—

# காந்தியும் சத்தியாக்கிரகமும்

— அ. பத்திநாதன், ஊர்காவற்றுறை —

நான் கடவுளை நேருக்கு நேராகக் காண விரும்புகின்றேன். உண்மை தான் கடவுள் என்று எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தமட்டிலும் கடவுளை அறியப் பயன்படும் ஒரே சாதனம் அகிம்சை — அன்பு என்பதுதான்.

சத்தியாக்கிரகத்தில் பொய் பித்தலாட்டங்கட்கு இடமே இல்லை. இன்று உலகத்தில் பொய்யும் பித்தலாட்டமும்தான் நிறைந்திருக்கின்றன. இம்மாதிரியான நிலைமையை நான் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இன்னும் அப்படி இருந்தேனானால், உலகை நெருப்புச் சூழ்ந்து கொண்டிருக்கும் போது கடவுள் எனக்குக் கொடுத்துள்ள செல்வத்தை நான் உபயோகிக்காததற்காக என்னைத் தண்டிப்பார்.

சத்தியாக்கிரகத்திற்கு கால வரம்பு எதுவும் கிடையாது. அதேபோல துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுவதில் அவனுக்குள்ள ஆற்றலுக்கும் வரம்பில்லை. இதனால் தான் சத்தியாக்கிரகத்தில் தோல்வி என்ற சமாச்சாரமே கிடையாது.

நான் என்ற அகந்தையை ஒழிப்பது, மிக மிகப் பணிவோடு நடந்துகொள்வது, தெளிவரன நம்பிக்கையோடிருப்பது — இந்தக் குணங்களெல்லாம் உடையதுதான் சத்தியாக்கிரகமாகும். சத்தியாக்கிரகத்திற்குரிய சன்மானம் சத்தியாக்கிரகமே. சுவர்க்கத்திற்குப் போகக்கூட ஒரு சத்தியாக்கிரகி, சாத்தானுடைய இறக்கைகளில் ஏற மாட்டான்.

இம்சைக்கு மத்தியில் அகிம்சை நியதியைக் கண்டு பிடித்த ரிஷிகள் நியூட்டனைவிடப் பெரி மேதாவிகள்; வெல்லிங்டனைவிடப் பெரிய வீரர்கள். அந்த ரிஷிகள் ஆயுதப் பிரயோக முறைகளையெல்லாம் தெரிந்து வைத்திருந்த போதிலும், அவற்றின் பயனின்மையை உணர்ந்து, நொந்து போன உலகத்திற்கு அகிம்சையின் மூலம் தான் விமோசனம் காண முடியும் என்பதை உணர்ந்தனர்.




# தெரிந்து கொள்ளுங்கள்

(ஜே. ஜெயக்குமார், கரணவாய் தெற்கு)

உலகிலே மிகவும் நீளமான சுரங்கம் சிம்ப்ளன் சுரங்கமாகும். இது சுவிஸ் நாட்டிலுள்ள இத்தாலிய எல்லையில் இருக்கிறது. இதன் நீளம் 12¼ மைல்.

இந்தியாவில் பேசும் படங்கள் 1931ம் ஆண்டில் தயாரிக்கப் பட்டன.

1817ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிரான்சிஸ் பிற் என்பவரிடமிருந்த பூனை ஓர் எலிக்குப் பால் கொடுத்து வளர்த்தது.

மலேசியாவில் ஒருவகை மீன் மிக உயர்ந்த மரங்களில் ஏறுகின்றது.

உலகின் மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடி கலிபோர்னியாவிலுள்ள மலையில் சுமார் 6126 அடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இதன் நீளம் 200 அங்குலம். விட்டம் 16 அடி, 8 அங்குலம். பாரம் 20 தொன்.

உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்வோலை முதலியன கடல் படு திரவியங்களாகும்.

இலங்கையின் வடக்கு முனை பருத்தித்துறை; தெற்கு முனை, தேவாந்திர முனையாகும்.

எகிப்தில் 69 ஆண்டுகளாக ஒரு மனிதன் ஒரு கோபுரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அமெரிக்காவைச்சேர்ந்த ஜோனி வெயிஸ் முல்லர் என்ற நீச்சல் வீரர், வீடுகளிலேயே அமைக்கக் கூடிய நீச்சற் குளங்களைத் தற்போது தயாரித்து வருகிறார்.

குவாலியிலுள்ள மணற் குவியல்களின் மீது மனிதர்கள் நடந்தால் அவைகள், நாய்கள் போன்று குரைக்கின்றன.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o. சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு, அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 5

பெயர் ______

பாடசாலை ______

விலாசம் ______

______ பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

______ கையொப்பம்

எனது கிராமம்

# மகிழூர் முனை

— மணிவண்ணன் —

வடக்கே மகிழூர், சேனைத்துறை என்னும் இரண்டு கிராமங்களையும், ஏனைய மும்மருங்கும் மீன்பாடும் மட்டுநகர் வாவியையும், அதனையண்டிய பொன் விளையும் பூமியையும் அசையாத அரணாகப் பெற்றுத் தன்பழம் பெருமைகள் அனைத்தையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டு குறுகி நிற்கும் ஓர் முனையே 'எனது கிராம'மாகும்.

இது மட்டு நகருக்குத் தெற்கே இருபது கல்லிலும், வங்காள விரிகுடாவிற்கு மேற்கே ஒரு கல்லிலும் அமைந்துள்ளது. அன்று இம்முனையில் 'மகிழை' மரங்கள் நிறைந்திருந்தமையினால் இதற்கு மகிழூர் முனையெனப் பெயர் அமைந்ததென்று மூத்தோர் கூறுவர். இதனை வலியுறுத்தத் தற்போதும் இக் கிராமத்தில் 'மகிழை' மரங்கள் ஒரு சில அமைந்துள்ளன.

கி. பி. மூன்றும் நூற்றுண்டில் சோழ நாட்டினின்றும் 'திருவீரமுனை' என்னும் கிராமத்திற் குடியேறிய வேளாளர், துறை நீலாவணையிற் குடியேறிக் காலகதியில் மகிழூர் முனை, குருமண்வெளி, மண்டூர், தம்பலவத்தை போன்ற கிராமங்களிலும் குடியேறி "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்" என்னும் ஔவையின் பொன்மொழிக்கிணைய வாழ்க்கை நடத்தி இன்றும் வேளாளராக வாழ்கின்றவர்களே எனது கிராமத்தவர்களாகும். இவர்கள் இன்றும் ஓரளவு பழமை விரும்பிகளாக இருப்பது இதற்கு எடுத்துக் காட்டாகும்.

எமது கிராமம் குறுகிய சனத் தொகையினரை உடையதாயினும் அறியாமையாகிய இருளினுள்ளே ஓரளவு மறைந்து கிடக்கும் எம் மக்களைத் தீவிரமாக 'அறிவாளி'களாக்க இங்கு இரண்டு ஆரம்ப பாடசாலைகள் அமைந்துள்ளன. அவற்றின் கல்வி நிலை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டே வருகின்றது. அவற்றின் உழைப்பினால் எமது கிராமம் அறிவாற்றினுள் அமிழ்ந்து விளையாடுமென்பதில் ஐயமில்லை.

எமது கிராமத்தில் விஷ்ணு, பிள்ளையார், மாரியம்மன் போன்ற அநேக கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் மாரியம்மன்கோயில்கள் சிறப்பு வாய்ந்தவை. விஷ்ணு, பிள்ளையார் கோயில்களில் கிழமை தோறும் பூசை நடைபெறுகின்றது. வைகாசித் திங்களில் நடைபெற வேண்டிய திருவிழா இங்கு ஆனியிலேயே நடைபெறுகின்றது. இவ்வாறான வைகாசித் திருவிழாவை மிக்க மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்து நிற்கும் கோயில்களையுடைய கிராமமே எமது கிராமமாகிய 'மகிழூர் முனை'யாகும்.

# மனிதன் மாறிவிட்டான்!

— அரியஜோதி கந்தவனம் —

குரங்கிலிருந்து மனிதன் வந்தான். காடுகளிலே அலைந்தான். மேடுகளிலே திரிந்தான். காட்டுமிராண்டி என்ற பெயருக்கு உரியவனானான். கொடும் புலிகளைக் கண்டு கிலி கொண்டான். சிங்கத்தைக் கண்டு பயந்தான். வேங்கையைக் கண்டு வெருண்டோடி மலை உச்சிகளிலும், மரக்கொம்புகளிலும் தாவிக் கொண்டான்.

காடுகளிலே அலைந்தவன் காணாத காட்சியைக் கண்டான். கேட்காத ஓசைகளைக் கேட்டான். குகையை விட்டு வெளியேறிவரும் சிங்கம் புள்ளிமானின் மீது பாய்ந்து அதைத் தனக்குணவாக்கிக் கொள்வதையும்—பாம்பு தவளையைக் கவ்வித் தன் பசியைப் போக்கிக் கொள்வதையும் கண்டான். அண்ணாந்து பார்த்தவன் கண்களில் ஆகாயத்தில் சுதந்திரத்தோடு வட்டமிட்டுத் திரிந்த பறவைகள் தென்பட்டன.

இதையெல்லாம் கண்டவன் ஒவ்வொரு ஜீவராசிகளுடைய வாழ்க்கையையும் ஆராய்ந்தான். புலி வாழக் குகை! கிளி வாழக் கூண்டு! குள்ள நரிக்கு இல்லமாகப் புதர்! பாம்புக்குப் புற்று! பறவைக்குக் கூடுகள்! மீன் வாழ நீர்! மிருகம் வாழக் காடு. இவையனைத்தும் சுதந்திரத்தோடு வாழ்கின்றன. ஆனால் நாமே பதுங்கி ஒதுங்கி வாழ்கின்றோம் என எண்ணினான்.

இனம் இனத்தோடு வாழ்வதைக் கண்ட இவன் தனக்கும் ஓர் இனம் இருப்பதை உணர்ந்தான் — அறிந்தான், தெளிந்தான். தன் இனத்தோடுதான் சேர வேண்டும் என எண்ணினான். அதன்படி ஒருநாள் தன்னைப்போல் மற்றொருவனைக் கண்டான். அவன்தான் தன் இனம் என்பதைத் தெள்ளத் தெளிவாக அறிந்து கொண்டான். முன்னவன் பின்னவனருகில் சென்றான். பின்னவனைக் கண்டு முன்னவன் பயந்தோடினான். ஆம்! அன்று மனிதனைக் கண்டே மனிதன் பயந்தான். இருந்தும் பின்னவனை விடவில்லை. முயற்சித்தான். முயற்சி பலனளித்தது. முடிவில் ஓரிடத்தில் கூடினர். இவ்விரு உருவத்தைக் கண்டு மூன்றும் உருவம் எங்கோ இருந்து இவர்களை நாடி ஓடி வந்தது. அந்த உருவம் வெருண்டதோ! மருண்டதோ! அதே உருவத்தைக் கண்டு அதே உருவம் அணைக்கத்தாவியது. அணைத்துக் கொண்டது.

இப்பொழுது மனித இனம் ஓரிடத்தில் கூடியது. அன்றுள்ள மனிதனுக்குப் பேச முடியாத நிலை. ஒருவர் எண்ணத்தை மற்றவர்க்கு உணர்த்த அவர்கள் கைஜாடையையே கையாண்டனர்.

காலச் சக்கரம் சுழன்றோடியது. ஆனால் இப்போது அ. உ. எ. என்ற தொனியை இலேசாக உச்சரிக்கத் தொடங்கினான். இப்படியே மற்றொருவன் பேசப் பேசப் பேச்சு வளர்ந்தது.

அன்று அப்படியெல்லாம் வாழ்ந்த மனிதன் இன்று எப்படி வாழ்கின்றான்?

உண்ண உணவின்றித் தவித்தவன் உண்ண நேரம் வகுத்து உண்ணும் உணவைப் பல வகையாகப் பிரித்து உண்ணப் பழகிக் கொண்டான். உடையின்றி ஊர் ஊராய் அலைந்தவன் உடையாலே உயர்ந்த ரகம், தாழ்ந்த ரகம் என்றெல்லாம் பிரித்து உடுத்தப் பழகிக்கொண்டான்.

அன்று இருக்க இடமின்றித் தவித்தவன் இன்று குடிசை அமைத்துக் கூடக் கோபுரம் அமைத்து, கோட்டை கொத்தளங்களைக் கட்டித் தன்னைப் பாதுகாக்கத்தானே தெரிந்து கொண்டான். அன்று மிருகத்தைக் கண்டு மருண்டவன் இன்று மிருகத்தையே உணவிலே சிறந்த உணவாக ஆக்கிக்கொண்டான்.

அன்று விரிந்த உலகிலே பறந்த பறவையைக் கண்ட மனிதன், இன்று அவனே பறக்கும் அளவிற்கு முன்னேறிவிட்டான்.

ஆகா! இதுபோல் இன்னும் எத்தனை, எத்தனையோ மாற்றங்கள். இத்தனையும் மனிதனால் தான். ஆம்! மனிதன் மாறிவிட்டான்!

# உங்களுடன்...... ......ஒரு வார்த்தை

என்னிடம் ஒரு கவிதைத் தொடர் கதை இருக்கிறது. அதைத் தங்களுக்கு அனுப்பி வைக்கவா, மாமா?— செ. குணரெத்தினம், மட்டக்களப்பு.

தாராளமாக அனுப்பி வைக்கலாமே!

* * *

நான் ஒரு நண்பிக்குக் கட்டுரை ஒன்று எழுதி உதவினேன். அவர் அதைத் தன் பெயரில் உங்களுக்கு அனுப்பி விட்டாரே, மாமா! —செல்வி பு. வேலுப்பிள்ளை, துணுக்காய்.

அது உங்கள் சொந்த விஷயம். எந்தப் பெயரில் கட்டுரை வருகின்றதோ, அந்தப் பெயரிலேயே அது வெளியிடப்படும்.

* * *

நான் எழுதிய வியாசம் தகுதி இல்லையா? அல்லது வளர்மதியில் இடம் இல்லையா?—க. செல்வநாயம், மாதகல்.

இடமில்லை. இடம் கிடைக்கும் போது, உமது வியாசமும் வெளிவரும்.

* * *

நான் எழுதி அனுப்பிய கட்டுரையைத் திருத்தி வெளியிட்ட உங்களுக்கு எவ்விதம் நன்றி செலுத்துவதென்று தெரியவில்லை— சி. யோகேஸ்வரி மூளாய்.

நல்ல கட்டுரைகளை மேலும் எழுதி அனுப்புங்கள். அதுவே எமக்கு நீர் ஆற்றும் நன்றியாகும்.

# வளர்மதியே வருக! அறிவைத் தருக!

— அரியாலையூர், கு. மோசெஸ் —

வளர்மதியே வளர்மதியே
வருக வருக வே
வளர்ந்துதினம்
அறிவொளியைத்
தருக தருக வே.

வளர்மதியே வளர்மதியே
வருக வருக வே
குழந்தைகளின் உளங்குளிரக்
கவிதை தருக வே.

வளர்மதிவே வளர்மதியே
வருக வருக வே
பழந்தமிழின் பெருமைதனைப்
புகழ்ந்து வருக வே.

வளர்மதியே வளர்மதியே
வருக வருக வே
இளந்தமிழர் உலகிற்கேற்ற
கதைகள் தருக வே.

வளர்மதியே வளர்மதியே
வருக வருக வே
குழந்தைகளை வாழ்நெறியில்
நடத்தி வளர்க வே!

# கழகச் செய்திகள்

## தமிழையும் ஆட்சி மொழியாக்க நடவடிக்கை எடுக்கவும்

### கொழும்பு விவேகானந்தசபை ஆட்சிக் குழு தீர்மானம்

இந்த நாட்டிலுள்ள இன்றைய மொழிச் சட்டங்கள் தமிழ் கலாச்சாரத்திற்கும் இந்து சமய ஆக்கத்திற்கும் இடர்ப்பாடாக இருப்பதாலும், இந்து மதத்தை அனுட்டிக்கின்ற தமிழ் பேசும் சமூகத்தினுடைய அடிப்படை உரிமையொன்றை மறுப்பதாலும், தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டிய முறையில் சட்டத் திருத்த நடவடிக்கை மூலம் வகை செய்தல் வேண்டும்.

கடந்த வாரம் நடைபெற்ற கொழும்பு விவேகாநந்த சபையின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் மொழிப் பிரச்சினை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சபையின் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் அத்தீர்மானம் குறிப்பிட்டுள்ளதாவது:—

இந்து சமயம், தமிழ் மொழி, தமிழ்க் கலாச்சாரம் இவற்றின் பாதுகாப்பையும், விருத்தியையும், நாட்டின் பொது நலனையும் தனது முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டுள்ள விவேகானந்த சபையின் ஆட்சிக் குழு, இந்நாட்டின் மொழிப் பிரச்சினை சம்பந்தமாக, இந்து மக்கள் சார்பில் தனது கருத்தையும் அபிப்பிராயங்களையும் வலிவுறுத்த விரும்புகிறது.

இந்த விடயம் சம்பந்தமாக ஏற்கனவே தனது அறிக்கைகளில் வெளியிட்டுள்ள கருத்துக் கிணங்க, இந்து சமயமும் கலாச்சாரமும், தமிழ்க் கலாச்சாரம், மொழி இவற்றுடன் பிரிக்க முடியாது இணைந்திருக்கின்றன. தமிழ் மொழி, கலாச்சாரம் இவற்றின் வளர்ச்சியைத் தடை செய்யும் எந்த நடவடிக்கையும் இந்து சமயம், கலாச்சாரம், இந்து சமூகம் ஆகியவற்றுக்கு ஈடு செய்ய முடியாத தீங்கை விளைவிக்கும். மிகவும் சுருக்கமாக இருக்க வேண்டுமென நாம் விரும்பும் இந்த அறிக்கையில், இந்து சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பினைப் பற்றியோ அல்லது தமிழ் மொழியைப் பலவீனமாக்க எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு நீங்காத தீங்கை விளைவிக்கும் என்பது பற்றியோ விளக்கமுற்படுவது அசந்தர்ப்பமாகும்.

இன்றைய சூழ் நிலையில், தற்போதைய மொழிச் சட்டம் இந்து சமயத்துக்கும், கலாச்சாரத்துக்கும் தீமை விளைவிப்பதுடன், இந்து சமயத்தவரை உள்ளடக்கிய தமிழ் பேசும் சமூகத்துக்கே அடிப்படை உரிமைகளை மறுக்கிறது; ஆகவே, தமிழ் மொழியையும் அரச கரும மொழியாக்குவதன் மூலம் சட்டத்தைத் திருத்தியமைத்து, திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தை அரசாங்கம் அமுல் நடாத்த வேண்டுமென நாம் வற்புறுத்த விரும்புகிறோம்.

இப்பொழுதுள்ள மொழிச் சட்டத்தினல், இந்நாட்டின் தமிழ் பேசும், இந்து சமூகத்தினருக்கு—அச் சமூகத்தைச் சார்ந்த அரசாங்க சேவையாளர் பலருக்கு, பல தொல்லைகள் ஏற்பட்டுள்ளன. இவர்களை இவ்விதம் அரசாங்கம் நடாத்துவது முறையற்றதென்பதுடன், சமத்துவம், நீதி ஆதிய அறங்களுக்குப் புறம்பானதாகவும் உள்ளது என்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இந்து சமயம், பௌத்த சமயம், கிறிஸ்துவ, இஸ்லாமிய சமயங்கள் ஆகிய இந்த நான்கு உலகப் பெரும் சமயங்களுக்கும் இத்தனை ஆண்டுகளாகத் தமிழ் மொழி ஆற்றிவந்துள்ள சேவையை, இந்நாட்டு மக்களுக்கு நாம் நினைவுறுத்த விரும்புகிறோம். சரித்திர காலந்தொட்டு, ஆதிய இலங்கையில் தமிழ் மொழி ஓர் முக்கிய இடம் வகித்து வந்துள்ளதென்பதையும் நினைவூட்ட விரும்பும் இவ் ஆட்சிக்குழு, எல்லா அரச கரும அலுவல்களிலும் மற்றும் எல்லாத் துறைகளிலும் சிங்களத்தைப் போலவே, தமிழ் மொழியும் அதற்குரிய இடத்தைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென விழைகிறது.

நிர்வாக, கல்வித் துறைகள் உட்பட்ட எல்லாத் தேசியத் துறைகளிலும் தமிழுக்குரிய மதிப்பு அளிக்கப்படுமேயாகில், இந்நாட்டின் ஒற்றுமை கட்டிக் காத்து, வளர்க்கப்படுவதுடன், ஒவ்வொரு பிரஜைக்கும் அவரது பொருளாதார, ஆன்மீக, சன்மார்க்க அபிவிருத்திக்கான சம சந்தர்ப்பம் கிடைப்பது உறுதியாகும் என்பது இந்த ஆட்சிக் குழுவின் கருத்தாகும்.

அத்துடன், இந்நாட்டின் சமய, கலாச்சார, பொது அபிவிருத்திக்கும், இந்நாட்டு மக்களின் ஒற்றுமைக்கும், சர்வதேசிய ஒத்துழைப்பு, தொடர்பு ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்துவதற்கும் ஆங்கில மொழி தொடர்ந்திருப்பது அத்தியாவசியமென்பதையும் இங்கு குறிப்பிட இவ் ஆட்சிக் குழு விரும்புகிறது.

#### சபைக்குத் தொடர்பில்லை

மேலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தீர்மானம் கூறுவதாவது: விவேகாநந்த நடன மன்றம் 27-6-63ல் நடாத்திய கலை விழாவில், நாட்டியம் பயிற்றுவித்தவர் ஒருவருக்கு 'நடனமணி' என்ற பட்டம் வழங்கப்பட்டமை குறித்து ஆராயப்பட்டது. குறிப்பிட்ட பட்டம் விவேகாநந்த சபையின் அதிகாரத்தோடு வழங்கப்படாமையினல் அப்பட்டத்திற்கும் சபைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று ஒருமுகமாகச் சபை முடிவுசெய்கிறது.

## முகவரி எழுதப்பட்ட மொழியிலேயே அத்தாட்சிப் பத்திரம் இருக்க வேண்டும்

—0—

### அஞ்சல் அதிபருக்கு தமிழரசார் கடிதம்

தமிழ் மொழியில் முகவரியிடப்பட்ட பதிவுக் கடிதங்களுக்குச் சிங்களத்தில் அத்தாட்சிச் சீட்டுக் கொடுப்பது தவறு என்றும், முகவரி எழுதப்பட்ட மொழியிலேயே அத்தாட்சிச் சீட்டும் வழங்க வேண்டும் என்றும் பிரதம அஞ்சல் அதிபருக்கு, தமிழரசுக் கட்சித் தலைமை நிலையம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழரசுக்கட்சித் தலைமை நிலையத்திற்குத் தமிழில் முகவரியிடப்பட்டுவந்த ஒரு கடிதத்தின் அத்தாட்சிச் சீட்டு, சிங்கள மொழியில் இருந்தமை கண்டு, அக் கடிதத்தைத் திருப்பி அனுப்பியதுடன் அது பற்றிப் பிரதம அஞ்சல் அதிபருக்கும் கடிதம் எழுதப்பட்டது.

அதற்குப் பிரதம அஞ்சல் அதிபர் எழுதிய பதிலில், அரசகரும மொழிப் பகுதியின் முடிவு அது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு மீண்டும் தமிழரசுக் கட்சித் தலைமை நிலையம் அனுப்பிய பதில் பின்வருமாறு:-

உங்கள் எல். ஆர். 269ம் இலக்க 27-6-63ந் திகதி கடிதம் பற்றித் தங்களுக்கும் அரச கரும மொழிப் பகுதி அத்தியட்சகருக்கும் பின்வருவனவற்றைச் சமர்ப்பிக்கின்றேன்.

பதிவுத் தபால்களை விநியோகித்து அதற்குரிய அத்தாட்சி பெறும் பொறுப்பு அதை விநியோகிக்கும் ஊழியர் மீது விடப்பட்டிருக்கிறது போன்று அத்தாட்சி அளிப்பவர்தான் யாருக்கு வந்த கடிதத்திற்கு அத்தாட்சி அளிக்கப்போகிறோம் என்பதைப் பற்றி நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. இந்நாட்டில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவிருந்த காலத்திலும் ஆங்கிலம் தெரியாத பொது மக்களுக்குக் கஷ்டம் விளைவிக்காத முறையில் தபால் சேவை நடத்தப்பட வேண்டுமென்பதற்காகக் கடிதங்கள் விநியோகம்செய்யும் தபால் ஊழியர்கள் உட்படச் சகல தபால் தந்திப் பகுதி ஊழியர்கள் சுதேசி மொழிகளில் ஓரளவு அறிவு பெற்றிருக்கவேண்டுமென்ற நியதி இருந்தது. அதே வித நியதி தற்போதும் (உத்தியோக மொழியில் மாற்றப்பட்டபோதும்) இருந்தே வரவேண்டும், இருந்தே வருகிறது.

பதிவுத் தபால் அத்தாட்சிச் சீட்டு விடயத்தில், முகவரி தமிழிலோ, ஆங்கிலத்திலோ இருந்தாலும் அதை வாசித்துக் கடிதத்தைப் விநியோகிக்கக் கூடிய ஊழியருக்கு அத்தாட்சிப் பத்திரம் உத்தியோக மொழியில் தான் இருக்க வேண்டுமென்ற அவசரமில்லை. ஆனல் உத்தியோக மொழி தெரியாத ஒரு பொது மகனுக்கு அத்தாட்சிப் பத்திரம் அவர் புரியும் மொழியில் இருத்தல் அவசியம் என்பதை நீங்கள் ஏற்றேதிரவேண்டும்.

தமிழ் பேசும் மக்களிடமும் தபாற் சேவைக்குரிய கட்டணத்தை அறவிடும் உங்கள் பகுதி, அவர்களுக்கு அவர்கள் புரியாத மொழியில்தான் சேவை செய்வோம் என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்பதைத் தயவாய்த் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகையால் இது விடயத்தைப் புனராலோசனை செய்து அத்தாட்சிப் பத்திரங்களை முகவரிகள் எழுதப்பட்ட மொழியிலேயே தயாரிக்க ஒழுங்குகள் செய்யுமாறு வேண்டுகிறேன்.

## தமிழ் பல்கலைக் கழக ஆதரவில் விவசாயப் பயிற்சி நிலையம்

—o—o—

### இயக்க வளர்ச்சிக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் உதவி

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்க ஆதரவில் திருகோணமலை அயலில் உள்ள உப்புவெளியில், செயல் முறை, விவசாய, கால்நடைப் பயிற்சி நிலையம் நிறுவப்படுகிறது ஏற்கனவே 80 ஏக்கர், மேட்டுத் தரைப்பயிர் செய்கைக்குரிய நிலம் இதற்கெனக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டும் இப் பகுதியில் நீர்ப்பாசன வசதியுடன் நெல் விளைவிக்கக்கூடிய 75 ஏக்கர் அளவு நிலத்தைக் குத்தகைக்குப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இயக்கத்தால் கையாளப்பட்டு வருகின்றன.

இலங்கை கமத்தொழில் திணைக்களத்தில் கால்நடை வைத்திய ஆராய்ச்சி அதிகாரியாயிருந்து இளைப்பாறிய திரு. பொ. ஜெகந்நாதன், B. Sc. (Sydney), M. R. C. V. S., D. T. V. M. (Edin.) அவர்கள் மேற்கூறிய பயிற்சி நிலையத்தின் அதிபராக நியமிக்கப்பட்டுத் தமிழ்ப் பல்கலைக் கழகத் தலத்துக்குப் பதவியேற்றுக் குடிபோயிருக்கிருர். சில ஆசிரியர்களுக்குரிய விடுதிகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளன. போதனை கூடங்களாகவும், ஆய்வு கூடங்களாகவும் பாவிக்கப்படவிருக்கும் கூடங்கள் திட்டமிடப்பட்டு நிர்மாண வேலைகள் ஆரம்பமாகவிருக்கின்றன. மாணவர் வதியும் மண்டபம் கட்டி முடியும் வரை தற்காலிகமாக மாணவர்கள் திருகோணமலை நகரத்தில் இவ்வியக்கத்தால் வாடகைக் கெடுக்கப்பட்ட வீடொன்றில் விடுதி வசதியளிக்கப்படுவர்.

#### முன்மாதிரி

தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டட நிதிக்கு ரூபா 6 ஆயிரம் கொடுத்துதவிய கரவெட்டி 'ஞானவாசா'வைச் சேர்ந்த ஒய்வு பெற்ற தமிழாசிரியர் திரு. ஆர். எம். சின்னத்தம்பி அவர்களின் வண்மையைப் பாராட்டி இவ்வியக்க ஆட்சிக் குழு நன்றி தெரிவிக்கின்றது. தமிழ் பேசும் இளைஞர்கள் சுதந்திரமான கமக்காரராகவும் தொழில் செய்வோராகவும் வாழ்க்கை நடாத்துவதற்குத் தாய்மொழி மூலம் விவசாயப் பொறியியல், பிரயோக அறிவியல் முதலியவற்றைப் பயிற்றுவிப்பதற்கு இப்படியான ஒரு ஸ்தாபனம் மிக அவசியம் என்பதே தமது நெடுநாளைய அவா என்று கூறி, திரு. சின்னத்தம்பி அவர்கள் இந் நன்கொடையைக் கொடுத்துதவினுர்.

திரு. சின்னத்தம்பி அவர்களின் பரோபகாரச் சிந்தனை, தமிழர்களின் எதிர்கால லோகாதய ஒழுக்க நல்விருத்தியில் உண்மையான ஈடுபாடுடைய தமிழ் மக்களின் இதயத்தில் நீங்காது எதிரொலிக்குமென்றும், இவ்வியக்கம் தனது நோக்கத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு மக்கள் தாமாகவே பொருள் கொடுத்து உதவ முன்வருவார்களென்றும் இயக்க ஆட்சிக் குழு கருதுகிறது.

## நடைமுறைத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தியை பிராமணர் பார்த்து அவரை "மகாகவி" அல்ல என்று கூறத் தலைப்பட்டதே அவர்களுக்கு இவர் மேல் இருந்த வெறுப்பைக் காட்டுகிறது.

பிராமணராகிய பாரதி மீசை வைத்துக் கொண்டதும் பூணுல் அணியாததும், தீண்டத்தகாதவர் என்போருடன் நட்புரிமை பாராட்டியதும் அவரின் மனப்பக்குவத்தைக் காட்டுகிறது.

"நடைமுறை அற்ற தத்துவம் மலட்டுத் தனம், தத்துவமற்ற நடைமுறை குருட்டுத் தனம்" என்ற மேனுட்டு அறிஞர் ஒருவரின் கூற்றிற்கிசைய தன் தத்துவத்தை நடைமுறையில் காட்டிய பாரதியைப் போற்ருது விட முடியாது.

## நீதி விளக்கம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யரசுவாதிகளான வழக்கறிஞர்களும் வழக்குரைஞர்களும் சட்டவல்லுநர்களும் அங்கு பணி புரிந்தனர். இதன் காரணமாக, ஜூலை மாதத்தில் ஆட்சியினரின் பருவ நீதிமன்றம் அயர் நாட்டில் கூடியபோது அங்கு செல்வதற்கு வழக்காளிகளும் இருக்கவில்லை; எதிரிகளும் இருக்கவில்லை; வழக்குரைநர்களும் இருக்கவில்லை. சிறு தகராறுகளைத் தீர்ப்பதற்கான நடுவர் அவைகளில் பெண்களும் கடமையாற்றினுர்கள்.

குடியரசுவாதிகளின் கையிலுள்ள அயர்நாட்டில் அடக்குமுறையும் கொரில்லாப் போரும் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இங்கிலாந்தில் பிரிவினை மசோதாவின் மேலான விவாதம் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. அயர்நாட்டுக்கு எவ்வித சுதந்திரமும் அளிக்கப்படுவதை விரும்பாத சேர் எட்வேட் காசன் தனது கட்டுப்பாட்டுக்குக் கீழ் உள்ள புரட்டஸ்தாந்துக் குண்டர்களை வடஅயர்நாட்டிலுள்ள கத்தோலிக்கர்களைக் கொலை செய்யும்படி ஏவிவிட்டார். இதே குண்டர்கள்தான் 1912ல் கத்தோலிக்க மக்களைத் தாக்கிக் கொடுமைப் படுத்தியவர்கள். குண்டர்களும் தயாராஞர்கள்.

(வளரும்)

ஆரம்பம் : ஆகஸ்ட் 2ந் திகதி வெள்ளிக்கிழமை !


**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **மொடர்ன்** (பதுளை)

**மொடர்ன்** (பண்டாரவளை) **ஸ்ரீகிருஷ்ணு** (திருகோணமலை) **விஜிதா** (ஹட்டன) **ஜெமினி** (ராகலை)

உள்ளத்தைத் தொடும் உருக்கமான குடும்பப் படம்! உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்! பானுமதியின் சிரிய நடிப்பைக் காட்டும் சித்திரம்!

**சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய, ஜனாதிபதியின் பரிசு பெற்ற படம்.**

**பானுமதி அன்னையில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகை எனப் பாராட்டுப் பெற்றவர்.**



## பி. பானுமதி--எஸ். வி. ரங்கராவ்


சௌகார் ஜானகி—சந்திரபாபு—ராஜா பி. ஏ.
ஆர். பாலசுப்பிரமணியம்—பாக்கியம்—நாகேஷ்
பி. டி. சம்பந்தம்—ராதாபாய்
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்

வசனம்: கோபாலகிருஷ்ணன்

# அன்னை

டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு

---



**7வது வெற்றி வாரம்!**

## சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்)

மற்றும் 4 திரைகளில் !

விசாலாட்சி பிலிம்சாரின்

# சுமைதாங்கி

**(ஆயிரம் வாசல் இதயம்)**

திரைக் கதை—வசனம்—டைரக்ஷன்
**—ஸ்ரீ த ர்—**

**ஜெமினிகணேசன்** (சுமைதாங்கியில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகர் எனப் பாராட்டுப் பெற்றவர்) **தேவிகா**

**முத்துராமன், சாரங்கபாணி, நாகேஷ், விஜயலக்ஷ்மி**
முதலியோர் நடித்தது

பாடல்கள் : கண்ணதாசன் இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி

நடனம்:
**குமாரி கமலா**

---

**இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!**

**செல்லமஹால்** (கொட்டாஞ்சேனை) **வின்ஸர்** (யாழ்ப்பாணம்) **தாஜ்மஹால்** (மாத்தளை) **ரீகல்** (நுவரெலியா)

**இம்பீரியல்** (மட்டக்களப்பு) **நெல்சன்** (திருகோணமலை) **ரீகல்** (கம்பளை) **இம்பீரியல்** (இரத்தினபுரி)

ஏ. நாகேஸ்வரராவ்—எம். ஆர். ராதா
எஸ். பாலச்சந்நர்—ஏ. கருணாநிதி
அஞ்சலிதேவி —சௌகார் ஜானகி
நடித்த






பின்னணி : டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா, சுசீலா, ஜமுனாராணி, ஜிக்கி

---

ஜனத் திரள் நிறைந்த
**3வது வாரம்!**

**கெயிட்டி**
(கொட்டாஞ்சேனை)

# மதுரை வீரன்

(புத்தம் புதிய கொப்பி)

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, பானுமதி, (காலஞ் சென்ற) என். எஸ். கிருஷ்ணன், மதுரம்
இவர்களுடன்.

---

**எதிர்பாருங்கள்!**

ஜெமினி கணேசன்
சாவித்திரி, குமாரி கமலா
தோன்றும்

# கொஞ்சும் சலங்கை

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜூலை மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.